விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 04 வியாழக்கிழமை (21.10.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 306

## 639 ஆரம்ப பாடசாலைகள் வடக்கில் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)
வடக்கு மாகாணத்தில் 200க்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட 639 ஆரம்ப பாட 15

## இன்றும் நாளையும் கல்வி சேவையை புறக்கணிப்போம்

இலங்கை ஆசிரியர் சங்கம் அறிவிப்பு

(கொழும்பு)
இன்று வியாழக்கிழமை மற்றும் நாளை வெள்ளிக்கிழமை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் 15

## மாணவர்கள், ஆசிரியர்கள் பாடசாலை செல்வதனை தடுக்க முடியாது

கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன

(கொழும்பு)
நாடுமுழுவதும் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பாடசாலைக்கு செல்வதை யாரா 15

மாகாணங்களுக்கிடையிலான

## பயணக் கட்டுப்பாடு ஒக். 31 வரை நீடிப்பு

இராணுவத் தளபதி சவேந்திர சில்வா



(கொழும்பு)
நாட்டில் அமுலிலுள்ள மாகாணங்களுக்கிடையிலான பயணத் தடை ஒக்ரோபர் 31ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாட்டை நீடிக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, உரிய தரப்பினருக்கு அறிவுறுத்தல் விடுத் 15

நாட்டில் மேலும்

## 18 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)
கொரோனாத் தொற்றால் நாட்டில் மேலும் 18 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், நாட்டில் கொரோனாத் 15

இராணுவம் வெளியேறினால் தமிழர் தாயகம் உய்யும்

# வடக்கு, கிழக்கை அரசாங்கம் அடிமையாக நிர்வகிக்கின்றது

நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்



(யாழ்ப்பாணம்)
வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இருந்து இராணுவத்தை வெளியேற்றினால்தான் தமிழர் தாயகம் உய்யும். தற்போது அடிமை நாடாக மத்திய அரசாங்கம் வடக்கு, கிழக்கை போரின் பின் நிர்வகித்து வருகிறது என யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். (16ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.மாநகர சபையின் செயற்பாடுகள் விரைவில் கணணி மயம்

முதல்வர் மணிவண்ணன்

6ஆம் பக்கம் பார்க்க

## புலிகளின் காலத்தில் வடக்கு, கிழக்கில் போதைப்பொருள் கடத்தல் இல்லை

எப்படிச் சாத்தியமானது என்று தெரியாது என்கிறார் கடற்படை பேச்சாளர்

(கொழும்பு)
தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் வடக்கு, கிழக்கு ஊடாக போதைப்பொருள் கடத்தல்கள் இடம்பெறவில்லை. 15

கிளிநொச்சியில் விபத்து

## யாழ்ப்பாணத்தை சேர்ந்த முதியவர் உயிரிழப்பு

(கிளிநொச்சி)
கிளிநொச்சியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் தொண்டைமானா 15

## இலங்கையில் நல்லிணக்கம் ஏற்பட ஒத்துழைப்போம்

பிரான்ஸ் அறிவிப்பு

(கொழும்பு)
இலங்கையில் நல்லிணக்கம் நிலவ வேண்டும். இதற்கு பிரான்ஸ் தன்னாலான ஒத்துழைப்புக்களை வழங்கும் என இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் எரிக் லாவெர்ட், வெளிவிவகார அமைச் 16

கொரோனாத் தொற்றால்

## யாழில் மேலும் இருவர் மரணம்

(யாழ்ப்பாணம்)
கொரோனாவால் யாழில் மேலும் இருவர் உயிரிழந்துள்ளனர்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் 15

யாழில் பல்வேறு பகுதிகளில்

## தங்க நகை அபகரித்த நான்கு பேர் கைது

(யாழ்ப்பாணம்)
யாழ்.மாவட்டத்தின் பல பகுதிகளிலும் வீதிகளில் சென்றவர்களின் தங்க நகைகளை அபகரித்துச் சென்ற நான்கு பேர் குற்றத் தடுப்புப் 16

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சண்டிலிப்பாயில் பழுதடைந்த கைத்துப்பாக்கி மீட்பு

(அராலி)



சண்டிலிப்பாய் சந்திப் பகுதியில் உள்ள காணியினை துப்புரவு செய்தபோது அதில் இருந்து பழுதடைந்த நிலையில் கைத்துப்பாக்கி ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் காணி உரிமையாளரால் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. இதனையடுத்து குறித்த இடத்திற்கு வந்த மானிப்பாய் பொலிஸ் அதிகாரி விசாரணைகளை மேற்கொண்டதோடு குறித்த கைத்துப்பாக்கியையும் எடுத்துச் சென்றனர். (ம-104)

# எல்லவலவில் நீராடச்சென்ற தந்தை, மகன், மகள் பலி

வெல்லவாய எல்லவல நீர்வீழ்ச்சியில் நீராடச் சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் நேற்று நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

இச் சம்பவத்தில் காத்தான்குடியைச் சேர்ந்த 38 வயதான தந்தையும், 15 வயதான மகன் மற்றும் 11 வயதான மகள் ஆகியோரே நீரில் மூழ்கி உயிரிழந்தவர்களாவர். (ம)

# மருதங்கேணியில் பொலிஸாருடன் இணைந்தே சட்டவிரோத மணல் அகழ்வு நடைபெறுகின்றது

## நேரில் ஆராய்ந்தபின் சுமந்திரன் எம்.பி கருத்து

(யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கில் பொலிசாருடன் இணைந்தே சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருவதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் குற்றச்சாட்டியுள்ளார்.

நேற்றைய தினம் பருத்தித்துறை மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறும் இடங்களுக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்ட பின் கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நீண்டநாட்களாக சட்டவிரோதமான மணல் கொள்ளை இந்த பகுதிகளில் இடம்பெற்று வருகின்றது. குறிப்பாக நான் ஒரு முறை எனது வாகனத்தில் வரும்போது கடத்தல்காரர்கள் என்னை கண்டதும் தமது வாகனத்தை திருப்பிக் கொண்டு சென்றதை நான் நேரடியாக கண்டேன்.

அதேபோல் இப்பகுதி மக்கள் மிகவும் அச்சம் அடைந்துள்ளார்கள் அதாவது சட்டவிரோத மணல் அகழ்வு தனியார் காணிகளில் இடம்பெற்று வருகின்றது.

சட்டவிரோதமாக மணல் அகழ்வு தொடர்பில் பொலிசாரிடம் தகவல் வழங்கும்போது அவர்கள் நடவடிக்கை எடுப்பதாக கூறுகிறார்கள்.

ஆனால் அவ்வாறு முறையிடும் போது மணல் கடத்தல் காரர் களிடமிருந்து பொலீசாரிடம் முறையிட்டவர்களுக்கு தொலைபேசி அழைப்பு வருகின்றது. அவ்வாறு தான் தற்போதைய நிலை காணப்படுகின்றது.

எனவே பொலிஸாருடன் இணைந்தே இந்த சட்டவிரோத மணல் கொள்ளை ஈடுபடுவது என்பது நிரூபணமாகின்றது என்றார். (ம-60,104)

## ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்

எமது கல்வி வலயத்தில் தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளராகச் சிறப்பாக செயற்பட்டு ஆசிரியர், மாணவர்களின் தமிழ் மொழி இலக்கண, இலக்கியத் திறன் சிறக்க உழைத்த

அமரர்

### கந்தையா சின்னத்துரை

( ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் – தமிழ் )



மனிதனாய் : 13.07.1953
புனிதனாய் : 13.10.2021

அவர்கள் கடந்த 13.10.2021 அன்று இறைவன் திருவடிகளைச் சரணடைந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சாவகச்சேரி. (8339)

உத்தியோகத்தர்கள்
தென்மராட்சிக் கல்வி வலயம்

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி சுபாநந்தினி பரணீதரன்
அவர்களின் அன்பு மாமனார்

அமரர்


### சின்னத்தம்பி வேலுப்பிள்ளை



அவர்களது மறைவு குறித்த தகவல் அறிந்து மிகவும் கவலை கொள்கின்றோம். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த கவலையையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம். அவரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்
யா / இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம்
வரணி. (C-2848)

## 31 ஆம் நாள் நினைவு மலர்



பிறப்பு 12 07 1984

இறப்பு 21 09 2021

அமரர்

### திருமதி தவேந்திரன் துளசிகா

31 ஆம் நாள் நினைவு : 21.10.2021

(C-2847)

எம் குடும்பத்தின் குல விளக்கே - நீ
அன்புக்கு இலக்கணமாய் அறத்தின் தலைவியாய்
என்று ஊர் போற்ற வாழ்ந்தவளே...
சிறப்பாக வாழ்ந்த நேரமதில் - சிரிக்க வைத்த
சிறப்பான குணமகளே - எமை
விட்டு மறந்து சென்றதுதான் ஏனோ?
மாதம் ஒன்று கடந்தும் ஆறாத்துயர்!!!!
ஆண்டவன் அழைப்பை ஏற்று நீ சென்றாலும்
நாட்கள் பல நகரலாம் - உன்
கடந்த நினைவுகள்
காலம் காலமாய் நிலைத்து நிற்கும்
பணிவினைக் கற்பித்தவளே.....
அன்பு ஒன்றை வாடகையாய் கொடுத்து
எங்கள் நெஞ்சில் வாழ்பவளே உன்
ஆத்மா சாந்தியடைய உன் பாதத்தில்
மலர் தூவி பிரார்த்திக்கின்றோம்.

நவிண்டில்,
கரணவாய் வடமேற்கு,
குலவரத்தோட்டம்.

குடும்பத்தினர்

## வடக்கு மாகாணத்தின் இந்து பௌத்த கலாசார பேரவையினால் இதுவரை நடாத்தப்பட்டுவந்த 2ஆம் மொழியான சிங்களம் மற்றும் ஆங்கில மொழிக் கற்கைநெறி மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்து பௌத்த கலாசார பேரவையினால் வடக்கு மாகாணத்தில் நடாத்தப்பட்டு வரும் 2ஆம் மொழி கற்கைநெறியான சிங்களம் மற்றும் ஆங்கில மொழி வகுப்புக்கள் கொவிட் -19 தடங்கலுக்கு பின்பு அரச பாடசாலைகள் வழமைபோன்று ஆரம்பிக்கப்பட்டவுடன் நவம்பர் மாதத்தில் இருந்து முன்பு நடந்த வகுப்புக்களும், புதிய வகுப்புக்களும் 05 மாவட்டங்களிலும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இக் கற்கைநெறி வகுப்புக்கள் 120 மணித்தியாலங்கள். 06 மாத காலம். சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் யாழ். மாவட்டத்திலும் அரச பாடசாலைகளில் முற்றிலும் இலவசமாக கற்பிக்கப்படும்.

இக்கற்கைநெறியில் G.C.E O/L, G.C.E A/L பரீட்சைகளில் சித்தியடைந்த மர்ணவர்கள் மற்றும் வேலை வாய்ப்பினை தேடுபவர்கள் இவ் ஆரம்ப வகுப்பில் கலந்துகொள்ளலாம். 05 மாவட்டங்களிலும் அரச உத்தியோகத்தர்களுக்கென தனியான விசேட வகுப்புக்களும் நடாத்தப்படும். இவ்வகுப்புக்களில் கலந்துகொள்ள விரும்பும் அனைவரும் அந்தந்த மாவட்டங்களின் விசேட இணைப்பாளருடனும், தலைமைக் காரியாலயத்துடனும் தொடர்புகொள்ளவும்.

.மேலும் 120 மணித்தியாலங்கள் கற்கைநெறியில் கலந்துகொள்ளும் மாணவர்களில் திறமையும், ஆர்வமும் உள்ளவர்களுக்கு 600 மணித்தியாலங்கள் ஆசிரியர் பயிற்சி வழங்கப்படும். இவ்வாறு ஆசிரியர் பயிற்சி பெறுபவர்களுக்கு கற்பித்தல் மட்டும் இலவசம்.

இக் கற்கைநெறியில் பட்டதாரி மாணவர்களும், அரச உத்தியோகத்தர்களும் கலந்துகொள்ளலாம். இதற்கான பதிவுகளை யாழ். தலைமைக் காரியாலயத்திலும், கிளிநொச்சி, முலலைத்தீவு மற்றும் வவுனியா இணைப்பாளரிடத்தில் கீழ்க் காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பினை ஏற்படுத்தி பதிவுகளினை மேற்கொள்ளலாம்.

- ★ (தலைமைக் காரியாலயம் ) யாழ்ப்பாணம் : 077 271 1181 / 076 028 2693
- ★ வன்னி மாவட்ட இணைப்பாளர் : 077 935 8923
- ★ முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் : 074 151 9139 / 076 164 6608
- ★ கிளிநொச்சி மாவட்ட இனணப்பாளர் : 076 563 2016
- ★ மன்னார் மாவட்ட இணைப்பாளர் : 076 028 2693

(8336)





பொதுச் செயலாளர்,
இந்து பௌத்த கலாசார பேரவை, வடக்கு மாகாணம்.

# பகவத்கீதையை மோடிக்கு வழங்கினார் நாமல் ராஜபக்ஷ



(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையே 2500 வருடங்களாகக் காணப்படும் நட்புறவின் அடையாளமாக, பாரத தேசம் இந்த உலகிற்குத் தந்த மிகப் புனிதமான நூலான பகவத் கீதை வெளியீட்டின் முதற் பிரதி, இலங்கயின் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ஷவினால் இந்தியப் பிரதமர் மோடிக்கு வழங்கப்பட்டது.

அது இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பரஸ்பர உறவை மேலும் வளர்க்கும் செயலாகும்.

இலங்கைத் திருநாட்டின் பிரதமர், மகிந்த ராஜபக்ஷவின் அறிவுறுத்தலுக்கு அமைவாக, புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கும் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் பகவத்கீதை என்னும் இந்நூல் பதிப்பிக்கப்பட்டது.

பாரததேசம் இந்த உலகிற்குத் தந்த மிகப் புனிதமான நூல் பகவத்கீதை.


அந்தப் பெருமைமிகு நூலினை இலங்கையில் வாழ்கின்ற இந்துக்கள் மட்டுமல்லாது, சகல மதத்தவர்களும் அறிந்துகொள்ளவேண்டும் என்ற நோக்கில் உருவாக்கப்பட்டதே இந்த நூல்.

இலங் கைத் திருநாட்டில் வாழுகின்ற அனைத்து மதத்தவர்களும் அறியும் வகையில் பகவத்கீதையில் அமைந்த சமஸ்கிருத சுலோகங்களை, சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் அறியும் வண்ணம் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

கௌதம புத்தர் பரிநிர்வாணமடைந்த உத்திர பிரதேசத்தில் உள்ள குஷிநகர் சர்வதேச விமான நிலையத்தை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேற்று திறந்து வைத்தார்.

அதன்பின்னர் இடம்பெற்ற சந்திப்பின் போதே இந் நூல் வழங்கப்பட்டது. (நி-5)

# கடவுச்சீட்டுக்கான முற்பதிவு இடை நிறுத்தம்



(கொழும்பு)

கடவுச்சீட்டு பெறுவதற்கான ஒக்டோபர் மாத முற்பதிவுகள் அனைத்தும் நிறைவடைந்துள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

கடந்த சில நாட்களாக கடவுச்சீட்டு பெறுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்ததன் காரணமாக இந்த மாதத்திற்கான முற்பதிவுகள் அனைத்தும் பூர்த்தியடைந்துள்ளதாக திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் முதல் கடவுச்சீட்டுக்களைப் பெறுவதற்கான தினங்கள் மற்றும் நேரங்களைப் பொதுமக்கள் முற்பதிவு செய்து கொள்ளமுடியும் என்றும் குறிப்பிட்டார். (நி-5)

## துயர் பகிர்கின்றோம்

**அமரர். கனகசபை கருணானந்தராஜா**



எமது யா/ யூனியன் கல்லூரியின் ஆய்வுகூட உத்தியோகத்தர்
**திரு. க.பிரதாபன்**
அவர்களின் அன்புத் தந்தையார்
**அமரர்.கனகசபை கருணானந்தராஜா**
அவர்கள்
இறைபதமடைந்த செய்தி கேட்டு நாமும் துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C 2845)

**ஆசிரியர் கழகம்,**
**யா/ யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.**

# மரண அறிவித்தல்

## திருமதி. அருந்தவம் சுப்பிரமணியம்

சண்டிலிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருந்தவம் சுப்பிரமணியம் அவர்கள் செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் திரு. தம்பிராஜா சுப்பிரமணியத்தின் (இளைப்பாறிய தபாலதிபர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு.திருமதி ஐயாத்துரை தங்கம்மாவின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற திருமதி. அஞ்ஜலா ஜெயகரன் மற்றும் திரு. அஞ்ஜிதன், திருமதி. அனுசியா, திருமதி. அஜந்தா ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.10.2021) வியாழக்கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் சண்டிலிப்பாய் மேற்கில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.



தோற்றம்: 1947.04.21
மறைவு: 2021.10.19

சண்டிலிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாய்
தொ.பே. 077 741 2348
தகவல்: குடும்பத்தினர்.
(8335)

# உலகக் கிண்ண தகுதிச் சுற்றில்

## ஓமானை வீழ்த்திய வங்கதேசம்



உலகக் கிண்ண இருபதுக்கு 20 கிரிக்கெட் தொடரின் முதல் சுற்றுக்கான நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டியில் ஓமான் அணியை 26 ஓட்டங்களால் வீழ்த்தி பங்களாதேஷ் அணி வெற்றி பெற்றுள்ளது.

இந்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 153 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

154 என்ற வெற்றியிலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய ஓமான் அணியால் 127 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுகொள்ள முடிந்தது.

இதனால் 26 ஓட்டங்களால் தோல்வியை சந்தித்த ஓமான் அணி 'பி' பிரிவில் புள்ளிப்பட்டியலில் இரண்டாவது இடத்தைத் தக்கவைத்துள்ளது.

விளையாடிய இரண்டு போட்டியிலும் வெற்றி பெற்றுள்ள ஸ்கொட்லாந்து அணி 4 புள்ளிகளுடன் முதலாவது இடத்திலும் பங்களாதேஷ் அணி 2 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தில் உள்ளது. (4-6)

# கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்த

## திருகோணமலை இளைஞன்




இலங்கையின் திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட விபுலானந்தன் கௌரிதாசன் என்பவர் உலகசாதனைப் புத்தகமான “கின்னஸ்” இல் இடம்பிடித்துள்ளார்.

குறித்த உலக சாதனைக்காக உலகெங்கிலுமிருந்து ஏறத்தாழ ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ஓட்ட வீர, வீராங்கனைகள் கலந்து கொண்டனர். இந்த ஓட்டப் போட்டியில், சுமார் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பேர் தகுதிகாண் நிலையில் நிராகரிக்கப்பட்டு 35 ஆயிரத்து 570 பேர் கின்னஸ் சாதனைக்கான புத்தகத்தில் அவர்களின் பெயர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவர்களுக்கான தர வரிசை வெளியிடப்பட்டது.

அந்தத் தர வரிசையின்படி 35 ஆயிரத்து 570 ஓட்ட வீர, வீராங்கனைகளுள் திருகோணமலையைச் சேர்ந்த இளைஞர் 609 ஆவது இடம்பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

திருகோணமலையைச் சேர்ந்த விபுலானந்தன் கௌரிதாசன் படைத்தது உலக சாதனையா? என்ற கேள்விகள் பலருக்கு எழுந்தாலும் உலக சாதனைக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓட்டப்பந்தையக் குழுவில் (Virtual runners) இணைந்து தகுதிகாண் நிலையில் பெயரிடப்பட்டவர்களில் இவரும் ஒருவர் என்பதும், "GUINNESS World RECORDS" அமைப்பினால் இது வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2431

### யாமினி

ஜவுளி கடைன்னு எழுதி வைங்கடா பாக்கவே பயமா இருக்கு..



### கிரிசாந்

உடம்பை இளைக்கணும்னு ஆசையா இருக்கு..



ஆனா அதுக்கு நாம வாயை கோ-ஆப்பரேட் பண்ண மாட்டேங்குதே

### சோமிகா

வாய்ப்பு என்பது
சிலருக்கு வாயினால் வரும்,
சிலருக்கு வாயினால் கெடும்.



ஓஓஓ அதனால தான் அதுக்கு பேரு 'வாய்' ப்போ..

### கபில்ராஜி

செல்போன் யூஸ் பன்றவங்க அதிகமாகிட்டதால அதோட விலைகள் குறஞ்சதா சொல்றாங்க...



அப்பறம் ஏன் அரிசி, பருப்பு விலை மட்டும் குறையாம இருக்கு..

### கௌசிகா

நீங்க: தீபாவளிக்கு துணி எடுத்தா உங்க புருசன்ககிட்ட போய் காட்டுங்கடி..




எம் பொண்டாட்டி கிட்ட வந்து எதுக்கடி காட்றீங்க...

### கஜிதரன்

தாங்கள் வந்ததன் நோக்கம்



தங்களை புகழ்ந்து பாடி Gas சிலின்ரர் ஒன்றை பரிசா பெற வந்தேன் மன்னா..



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## இராசிபலன்

21.10.2021
ஐப்பசி 04, வியாழக்கிழமை
பிரதமை முன்னிரவு 10.18 மணிவரை
அச்சுவினி-பிற்பகல் 5.08 மணிவரை
சுபநேரம் -7.32-9.02 மணிவரை
இராகு காலம்- 1.32- 3.02 மணிவரை
சந்திராஷ்டமம்- உத்தரம்,அத்தம்
அமிர்த சித்தம் வளவன்


மேஷம்

கனவு பலிதமுண்டு, உடல்நலனில் அக்கறை காட்டுவீர்கள், எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம்,பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம்.


ரிஷபம்

விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், நண்பர்கள் சந்திப்பால் சுப விரயங்கள் ஏற்படலாம், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் நாள்.


மிதுனம்

எண்ணிய காரியங்கள் எளிதில் நிறைவேற லாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், இயல்பான வாழ்க்கையில் இன்பங் கள் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும்.


கடகம்

குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உரு வாகும், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், தூரதேசத்திலிருந்து சுப செய் திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.


சிம்மம்

சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், பேச்சில் இனிமை தென்படும், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், ஆன் றோர்களின் சந்திப்புக்கள் இடம் பெறலாம்.


கன்னி

குடும்ப பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம்,பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை, கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள்.


துலாம்

குடும்பத்தினரிடையே மகிழ்ச்சி கூடும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெற லாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்,பயணங்களால் பலனுண்டு.


விருச்சிகம்

மனக்குழப்பம் அகலும், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம் பெறலாம், பயணங்களால் பலனுண்டு.


தனுசு

கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.


மகரம்

வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பெற்றோரின் நலனில் அக்கறை காட்டுவீர்கள்,நண்பர்கள் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்.


கும்பம்

எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், குடும்பப் பொறுப்புக்கள் கூடும், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.


மீனம்

தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வாக்கு மேன்மை யுண்டு, வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

தூய உள்ளத்திலிருந்தே நல்வாழ்வு என்னும் கனி பிறக்கும்.

# எதிர்க்கட்சி வரிசையில் அமர மைத்திரி மந்திராலோசனை

(கொழும்பு)

**அரசாங்கத்தின் செயற்பாடுகளால் அதிருப்தியடைந் துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, அரசாங்கத்திற்கு அளித்துவரும் ஆதரவை விலக்கி எதிர்க்கட்சி வரிசையில் அமர்வதற்கு ஆலோசனை நடத்திவருகிறது.**



இதன் காரணமாக தென்னிலங்கை அரசியல் களம் பெரும் பரபரப்பை சந்தித்துள்ள நிலையில் பாராளுமன்ற அமர்வும் நடை பெறவுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் தனித்து களமிறங்க தீர்மானித்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, இனிவரும் எந்த தேர்தல்களிலும் பொதுஜன முன்னணியுடன் கூட்டுவைப்பதில்லையென்றும் முடிவு செய்துள்ளது.

விவசாயிகளின் உரப் பிரச்சினை, அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிப்பு உட்பட்ட பல்வேறு பிரச்சினைகளை பகிரங்கமாக பேச வேண்டுமெனில் எதிர்க்கட்சி தரப்பில் இருக்கவேண்டுமெனவும் அதனால் அரசிலிருந்து வெளியேறி எதிர்க்கட்சி வரிசையில் அமர சுதந்திரக்கட்சி மேல் மட்டத்தில் மந்திராலோசனைகள் நடத்தப்படுவதாகவும் அக்கட்சியின் உயர் மட்ட வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும் அரசிலிருந்து வெளியேறுவதாயின் இந்த ஆட்சியின் இறுதி வருடத்தில் வெளியேறவேண்டுமெனவும், முன்கூட்டி வெளியேறினால் அது அரசியல் ரீதியாக தாக்கத்தை ஏற்படுத்துமெனவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் கட்சித் தலைமையிடம் தெரிவித்துள்ளதாக அறியமுடிகின்றது.

இருப்பினும் நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து விசேட அறிவிப்பை சுதந்திரக்கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவிரைவில் வெளியிடுவார் என்றும் சுதந்திரக் கட்சியின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை அடுத்து வரும் தேர்தல்களில் மொட்டு சின்னத்தைக் கைவிட்டு வெற்றிலை சின்னத்திலேயே போட்டியிடவும் சுதந்திரக்கட்சி தீர்மானித்திருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-5)

# மரணதண்டனைக்கான வயதெல்லையில் மாற்றம்- திருத்தச் சட்டமூலம் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

சிறுவர்களுக்கு மரண தண்டனையை இரத்து செய்வதற்கான திருத்தப்பட்ட சட்டமூலம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த சட்டமூலத்தை நீதி அமைச்சர் அலிசப்ரி இன்று (வியாழக்கிழமை) பாராளுமன்றில் சமர்ப்பிக்கவுள்ளார்.

இதன்மூலம் இளந்தவறாளர்கள் (பயிற்சிப் பாடசாலைகள்) திருத்தச் சட்டமூலத்தின் ஊடாக முதலில் வகுக்கப்பட்டிருந்த 18 என்ற வயதெல்லை 18-22 எனத் திருத்தப்படுகிறது. பாலியல் நடுநிலையைப் பேணுவதும் இச்சட்டத்திருத்தத்தின் நோக்கமாகும்.



மேலும் தண்டனைச் சட்டக்கோவையில் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தத்தின் ஊடாக பதினெட்டு வயதுக்கு உட்பட்டவர்களுக்கெதிராக மரண தண்டனை வழங்குவதற்குப் பதிலாக தடுத்து வைத்தல் நிறுவனமொன்றில் தடுத்துவைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# 'பிரன்ஹா' எனப்படும் ஆபத்தான மீன் இனம் தென்னிலங்கை நீர்த்தேக்கங்களில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

தென்னிலங்கை நீர்த்தேக்கங்களில் மனிதர்களை உட்கொள்ளும் மீன் இனங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இருப்பினும் அதன் முட்டைகளைக் எடுக்கவோ, பயமுறுத்தவோ செய்யும்போது தான் மனிதர்களைக் கடிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"பிரன்ஹா" எனப்படும் இந்த ஆபத்தான மீன் இனம் களனி கங்கை, பொல்கொட மற்றும் தியவன்னா ஏரி போன்ற இடங்களில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

சில காலங்களுக்கு முன்பு அலங்கார மீன் இனங்கள் தொழிலுக்காக கொண்டுவரப்பட்ட போது அவற்றுடன் இந்த மீன் இனமும் இருந்திருக்கலாம் என மீன்வளர்ப்பு பிரிவின் மூத்த விஞ்ஞானி அஜித் குமார தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த மீன் இனம் தென் அமெரிக்க நன்னீர் நதிகளில் காணப்படுகிறது. சுமார் 20 முதல் 25 வருடங்கள் உயிர் வாழக்கூடியது. சாம்பல், வெள்ளை, நீலம், சிவப்பு நிறங்களில் காணப்படுகிறது.

இது, புழு, பூச்சி, நத்தை, ஆமை, தாவர இனங்களை உண்ணக்கூடிய அனைத்துண்ணி ஆகும். வேறு உணவு ஏதும் கிடைக்காத போது தன் இனத்தையே வேட்டையாடி உண்ணும். கூர்மையான பற்கள், வலிமையான தாடைகள் கொண்டது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (நி-5)

# யாழ். மாநகர சபையின் செயற்பாடுகள் விரைவில் கணனி மயப்படுத்தப்படும்

## யாழ்.மாநகர முதல்வர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் செயற்பாடுகள் அனைத்தும் விரைவில் கணனி மயப்படுத்தப்படும் என யாழ். மாநகர முதல்வர் வி. மணிவண்ணன் தெரிவித்தார்.

நேற்று யாழ். மாநகர சபையின் உத்தியோகபூர்வ இணையத்தள அங்குரார்ப்பணம் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது நாம் கணனி உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அந்த வகையிலேயே யாழ் மாநகர சபையின் செயற்பாடுகளை முற்றுமுழுதாக இணையவழிமூல கணனி மயப்படுத்தப்பட்ட வேண்டும் என்பது என்னுடைய இலக்கு



அந்த இலக்கை நோக்கிய பயணத்தின் மிக காத்திரமான பணியின் ஒரு பகுதியை இன்று நாங்கள் அடைந்துள்ளோம்.

அத்துடன் எதிர்காலத்தில் யாழ். மாநகர சபையின் செயற்பாடுகள் அனைத்தும் இலத்திரனியல் மயப்படுத்தப்பட்டு இணையத்தின் ஊடாக பொது மக்கள் தமது சேவையினை வீட்டில் இருந்தே பெற்றுக் கொள்ளக் கூடியவாறு முன்னெடுக்கப்பட உள்ளது.

அதற்குரிய வேலைத் திட்டங்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டு ள்ளன எனத் தெரிவித்தார். (7-5-18-33-104)

# புத்தக கண்காட்சியும் விற்பனையும்

(யாழ்ப்பாணம்)

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு "எங்கட புத்தகங்கள்" நடத்தும் புத்தகக் கண்காட்சி விற்பனை.

யாழ் பொதுசன நூலகத்தில் நாளை 22, 23, மற்றும் 24 ஆம் திகதிகளில் இடம்பெற உள்ளது.

யாழ். மாநகரசபையின் அனுமதியுடன் முன்னெடுக்கப்படும் இந்தக் கண்காட்சி, சுகாதார நடைமுறைகள் இறுக்கமாக கடைப்பிடிக்கப்பட்டு நடத்தப்பட உள்ளது.

தங்களது புத்தகங்களை காட்சிப்படுத்தி விற்பனை செய்யவிரும்பும் ஈழத்து எழுத்தாளர்கள் எம்மோடு தொடர்பு கொண்டால், அவர்களது புத்தகங்களையும் காட்சிப்படுத்தி விற்பனைசெய்ய ஒழுங்கு செய்ய முடியும் என ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (4-7-33)

# அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்பாணம்)

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில் நாளைவெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் சுன்னாகம் கதிரமலை சிவன் தேவஸ்தான பிரதம குருக்கள் சிவஸ்ரீ ச.ஸ்ரீகாந்தன் குருக்கள் பிரம்மஸ்ரீ ஸ்ரீகாந்தன் குருக்கள் சர்ஜித் சர்மாவின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலி பரப்பு நிகழ்வாக இடம்பெறவுள்ளது. (4-7)



கரவெட்டி பிரதேச செயலாளர் பிரிவில் உடுப்பிட்டி இமையாணன் பகுதியில் "தலைக்கு கீழ் நிழல்" எனும் வீட்டுத் திட்டத்தின் கீழ் இராணுவத்தினரால் கடந்த திங்கட்கிழமை பயனாளிக்கு வீடு கையளிக்கப்பட்டது. (படம்:-மகாலிங்கம்)

# பாடசாலை மாணவர்களுக்கான தடுப்பூசி ஏற்றும் பணி ஆரம்பம்

## பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரிப் பணிமனை

(கரணவாய்)

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான தடுப்பூசி ஏற்றும் பணிகள் இன்றும் நாளையும் பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளன.

அதனடிப்படையில் இன்று காலை 8.30 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவிகளுக்கும், நண்பகல் 12 மணி முதல் 2 மணிவரை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவர்களுக்கும், நாளை காலை 8.30 மணி முதல் 9.30 மணிவரை பருத்தித் துறை ஹாட்லிக் கல்லூரி மாணவர்களுக்கும், 9.30 மணி முதல் 11 மணி வரை வட இந்து மகளிர் கல்லூரி மாணவர்களுக்கும், 11 மணி முதல் 1 மணி வரை வேலாயுதம் மகா வித்தியாலயம், சிவப்பிரகாச வித்தியாலயம், புற்றளை மகா வித்தியாலயம், வல்வை மகளிர் கல்லூரி, சிதம்பர கல்லூரி மாணவர்களுக்கும் ஏற்றப்படவுள்ளது.

உரிய நேரத்தில் சுகாதார நடைமுறைகளை கடைப் பிடித்து அனைத்து மாணவர்களும் தடுப்பூசியை பெற்றுக் கொள்ளுமாறு பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (7-5-60)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 280 | 300 | 250 | 280 |
| உருளைக்கிழங்கு | 160 | 160 | 150 | 160 |
| பச்சைமிளகாய் | 120 | 120 | 150 | 160 |
| தக்காளி | 140 | 120 | 120 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 60 | 60 | 50 |
| கோவா | 140 | 140 | 180 | 160 |
| கரட் | 100 | 150 | 180 | 200 |
| பூசணி | 80 | 50 | 60 | 50 |
| புடோல் | 160 | 160 | 120 | 160 |
| வாழைக்காய் | 50 | 50 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 200 | 180 | 280 |
| பெரிய வெங்காயம் | 200 | 170 | 160 | 160 |
| பாகற்காய் | 450 | 500 | 450 | 400 |
| வெண்டிக்காய் | 140 | 150 | 120 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 120 | 120 |
| பயற்றங்காய் | 250 | 250 | 240 | 300 |
| லீக்ஸ் | 200 | 200 | 280 | 240 |
| பீற்றூட் | 50 | 50 | 60 | 80 |
| கறிமிளகாய் | 250 | 250 | 280 | 350 |
| முருங்கைக்காய் | 250 | 280 | 240 | 280 |
| போஞ்சி | 250 | 260 | 300 | 320 |
| கத்தரிதம்புள்ள | 250 | 260 | -- | 240 |
| கீரை – 1 பிடி | 80 | 90 | 50 | 100 |
| தேசிக்காய் | 400 | 400 | 350 | 450 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 70 | 50-80 |
| இராசவள்ளி | 300 | 300 | 260 | 300 |
| வெங்காயப்பூ | 350 | 250 | -- | 300 |
| முள்ளங்கி | 100 | 120 | 100 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 50 | 20 |
| வல்லாரை | 20 | 70 | 20 | 30 |
| ஈரப்பலா | 50 | — | — | 120 |

# திருமுறைகளின் இலக்கிய நயத்தை ஆய்வு செய்து கலாநிதி பட்டம் பெற்ற

## கார்த்திகேசு திருப்பதி

(யாழ்ப்பாணம்)

திருமுறைகளில் பொதிந்துள்ள தமிழ் இலக்கியச் சிறப்பை உலகிற்கு வெளிப்படுத்தும் வகையில் "பெரியாழ்வாரும், மாணிக்க வாசகரும் கையாண்ட இலக்கிய உத்திகள் பற்றிய ஒப்பியல் ஆய்வு"என்னும் தலைப்பில் ஆய்வு செய்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறையில் கலாநிதிப் பட்டம் பெற்றுள்ளார் கலாநிதி கார்த்திகேசு திருப்பதி.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக தமிழ்த்துறை பேராசிரியர் ம.இரகுநாதனின் மேற்பார்வையில் குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட கலாநிதி திருப்பதி ஓய்வுநிலை தமிழ் ஆசிரியர் ஆவார். இயல்பாகவே தமிழ் மொழியையும் சைவசமயத்தையும் மாணவர்களுக்கு சிறப்பாகக் கற்பிப்பதில் ஆற்றல் மிக்கவர்.

கிளிநொச்சி முதல் முழங்காவில் மகாவித்தியாலயம், பளை மத்தியகல்லூரி, அக்கராயன் மகாவித்தியாலயம், கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி, கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் தமிழ் பாடத்தை கற்பித்து பல மாணவர் பரம்பரையை உருவாக்கியுள்ளார்.

அத்துடன் 2017 இல் வட மாகாணக் கல்வி அமைச்சினால் நல்லாசிரியர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

"திருநாவுக்கரசு நாயனார் தேவாரத்தில் உள்ள இலக்கிய உத்திகள்" தலைப்பில் மேற்கொண்ட ஆய்விற்காக 2010



இல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தினால் முது தத்துவமானி பட்டமும் இவருக்கு வழங்கப்பட்டது.

2018 இல் ஆசிரிய சேவையில் இருந்து ஓய்வுபெற்ற இவர் இன்றைய மாணவர்களின் பயன்பாட்டிற்காக 2020 இல் 'திருநாவுக்கரசர் தேவாரத்தில் இலக்கிய உத்திகள்" என்ற ஆய்வு நூலை எழுதி வெளியிட்டுள்ளார். (4-7)

# முகக் கவசமின்றி பயணிப்பவர்களுக்கு எதிராக கடுமையாகும் சட்டம்

## பொதுமக்களுக்கு பொலிஸார் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**முகக் கவசம் அணியாதவர்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக செயற்படுத்தப் போவதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.**



கொழும்பு நகரத்தில் முகக்கவசம் அணியாமல் பயணிப்போர் மற்றும் விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தற்போது சிலர் முகக் கவசம் அணியாமல் பயணிப்பதாக பொலிஸ் நிலையங்களுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

கொழும்பில் நடைபாதை கடைகள், கோட்டை ரயில் நிலையம் மற்றும் பேருந்து நிலையங்கள் ஆகியவற்றில் புலனாய்வுப்பிரிவு அதிகாரிகள் இது தொடர்பில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5)

# திரவ உரம் நாட்டிற்கு கொண்டுவரப்பட்டது

(கொழும்பு)

நனோ நைட்ரஜன் திரவ உரத்தின் முதல் தொகுதி நேற்று நாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. அதற்கமைய ஒரு இலட்சம் லீற்றர் நனோ நைட்ரஜன் திரவ உரம் இந்தியாவிலிருந்து விமானத்தின் ஊடாக கட்டுநாயக்க விமான நிலையத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

அதனை கமநல சேவை மையங்களினூடாக முதல் விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேநேரம், மிகுதி 31 இலட்சம் லீற்றர் நனோ நைட்ரஜன் திரவ உரம் எதிர்வரும் நாட்களில் நாட்டிற்குக் கொண்டுவரப்படவுள்ளது.

நனோ நைட்ரஜன் மூலத்துடன் கூடிய விஷேட திரவ உரத்தினை இறக்குமதி செய்ய அமைச்சரவை அண்மையில் அனுமதி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# அடுத்த ஆண்டில் தங்கம் விலை உயரும்

(கொழும்பு)

கொரோனாத் தொற்றை அடுத்து நடப்பாண்டில் குறைவடைந்து காணப்பட்ட தங்கத்தின் கேள்வி கோரல் அடுத்த ஆண்டில் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக உலக தங்கக் கவுன்சில் தெரிவித்துள்ளது.

இதனால் அடுத்த வருடம் தங்கத்தின் விலை பாரியளவில் அதிகரிக்கும்.

கொரோனாக் கட்டுப்பாடுகளால் இந்த ஆண்டின் எஞ்சிய மாதங்களிலும் தங்கத்தின் தேவை குறைவாகவே நீடிக்கும் என்று உலக தங்கக் கவுன்சில் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (நி-5)

# இந்திய குஷிநகர் விமான நிலையத்தில் முதலில் தரையிறங்கிய இலங்கை விமானம்

(கொழும்பு)

இந்தியாவின் உத்தரப் பிரதேச மாநிலம் குஷிநகரில் 260 கோடி ரூபாய் இந்திய மதிப்பில் கட்டப்பட்டு நேற்று திறந்து வைக்கப்பட்ட சர்வதேச விமான நிலையத்தில், இலங்கை விமானம் முதலாவதாக தரையிறங்கியது. அமைச்சர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட குழுவினர், குஷிநகர் விமான தளத்தில் தரையிறங்கினர்.

இந்த விமானத்தில் 100 பௌத்த பிக்குகளும் சென்றுள்ளனர். கௌதம புத்தர் பரிநிர்வாணம் அடைந்ததாக கூறப்படும் வரலாற்றுச்சிறப்பு மிக்க புனித நகராக குஷிநகர் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)










# வீட்டில் சிகிச்சைபெறும் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி

(கொழும்பு)

கொரோனாத் தொற்றுக்குள்ளாகி வீடுகளில் சிகிச்சை பெறும் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என வீடுகளில் நோயாளர்களை பராமரிக்கும் மருத்துவ குழுவின் பிரதானி விசேட மருத்துவர் மல்காந்தி கல்ஹேன தெரிவித்தார்.

இந்த நோயாளர்களின் எண்ணிக்கை 20 முதல் 30 சதவீதம் வரையில் வீழ்ச்சி அடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்தமைக்கு தடுப்பூசி ஏற்றலே பிரதான காரணமாகும் என விசேட மருத்துவர் மல்காந்தி கல்ஹேன தெரிவித்தார். (நி-5)

# அரசாங்கத்தின் மீது கடும் அதிருப்தியில் மக்கள் ஒத்துக்கொண்டது ஆளும் தரப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் மீது மக்கள் கடும் அதிருப்தி அடைந்துள்ளதால் மாகாண சபை தேர்தலை இந்த நேரத்தில் நடத்த வேண்டாம் என ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ஜெகத் குமார வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கம் மீது மக்கள் விரக்தியிலும் குழப்பத்திலும் உள்ளனர். எனவே இந்த நேரத்தில் தேர்தலை நடத்த முடியாது.

அரசாங்கம் எடுத்த முடிவுகளை மக்கள் உணர்ந்து கொள்ள இன்னும் ஏழு முதல் எட்டு மாதங்கள் ஆகும். அரசாங்கம் எடுத்த முடிவுகளுக்கு மக்கள் உடன்படுவார் கள் என்று நினைக்கிறேன்.

எனவே அந்த நேரத்தில் தேர்தலை நடத்தி வெற்றி பெறலாம் என அவர் தெரிவித்தார். (நி-5)

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் ஆதனப் பெயர் மாற்றம்

### 79, நெல்லியான் வீதி, வட்டாரம்-05

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரம் உப அலுவலகம் எல்லைக்குட்பட்ட வட்டாரம் 05 நெல்லியான் வீதியிலுள்ள இல.79 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப் பதிவேட்டின் பிரகாரம் முருகன் செல்லன் என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை சின்னவன் நடேசன் கைம்பெண் இலட்சுமி ஆகியவர் குறித்த ஆதனம் தனது காலஞ்சென்ற தந்தை முருகன் செல்லனுக்குச் சொந்தமாய் இருந்தது என்றும் அவர் ஆட்சியிலேயே நெடுங்காலமாக இருந்தது என்றும் அவர் உயிரோடு இருக்கும் பொழுது 1965ம் ஆண்டளவில் இவ்வாதனம் தனக்கு சீதனமாக அமையவேண்டும் என வாய்ச்சொல் மூலமாக நன்கொடையளித்திருந்தார் என்றும் அன்று தொடக்கம் கடந்த 39 வருடங்களாக எவ்வித இடையூறுமின்றி தன்னால் ஆட்சி செய்யப்பட்டு வருகின்றது என்றும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு ஆ.குமாரசுவாமி முகதாவில் 7887/01.09.2004 ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியுள்ளார்.

நடேசன் பரஞ்சோதியும் பெண் பரமேஸ்வரியும் ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு யோ.சத்தியநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2510/04.10.2009ஆம் இலக்க உறுதியால் குறித்த சின்னவன் நடேசன் கைம்பெண் இலட்சுமி ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

நடேசன் பரஞ்சோதியும் பெண் பரமேஸ்வரியும் ஆகியவர்கள் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது நடேசன் பரஞ்சோதியும் பெண் பரமேஸ்வரியும் ஆகியவர்களுக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேச சபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தவிசாளர்/ செயலாளர்  
வலிகாமம் மேற்கு பிரதேச சபை.

(8334)

# தற்கொலை குண்டுத் தாக்குதல் நிகழ்த்தியவர்களின் குடும்பங்களுக்கு ஆப்கானில் நிலம்

## தலிபான்கள் அறிவிப்பு

(காபூல்)

அமெரிக்கா, ஆப்கானிஸ்தான் பாதுகாப்புப் படை வீரர்கள் மீது தற்கொலை குண்டுத் தாக்குதல் நடத்திய வர்களின் குடும்பங்களுக்கு நிலம் வழங்கப்படும் என்று தலிபான்கள் அறிவித்துள்ளனர்.



தலைநகர் காபூலில் உள்ள ஹோட்டலில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் தற்கொலை தாக்குதல் நடத்தி உயிரிழந்த தலிபான் இயக்கத்தைச் சேர்ந்தவர்களின் குடும்பத்தினர் பங்கேற்றனர்.


அந்த நிகழ்ச்சியில் அந்நாட்டின் உள்துறை அமைச்சர் சிராஜுதீன் ஹக்கானி பங்கேற்றுப் பேசுகையில், ஆப்கானிஸ்தான் மற்றும் அமெரிக்க படையினர் மீது தற்கொலை தாக்குதல் நடத்தியவர்களைத் தியாகிகள் என பாராட்டினார். அவர்களை ஆப்கானிஸ்தான் மற்றும் இஸ்லாம் மதத்தின் நாயகர்கள் என்றும் கூறினார்.

நிகழ்ச்சியின் முடிவில், தற்கொலைத் தாக்குதலில் உயிரிழந்த தலிபான் இயக்கத்தைச் சேர்ந்தோரின் குடும்பங்களுக்குத் தலா 10 ஆயிரம் ஆப்கானிக்களை (ஆப்கன் நாணயம்) வழங்கினார்.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் நிலம் வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இதர பயங்கரவாத அமைப்புகள் நிகழ்த்தும் தற்கொலைத் தாக்குதல்களுக்கு கண்டனம் தெரிவிக்கும் தலிபான்கள், தங்கள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் நடத்திய தற்கொலைத் தாக்குதல்களுக்குப் பாராட்டு தெரிவிப்பது முரண்பாட்டை வெளிப்படுத்துவதாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-4)

# இராணுவ பேருந்து மீது தாக்குதல் 13 பேர் பலி; பலர் காயம்



(டமாஸ்கஸ்)

சிரியா தலைநகர் டமாஸ்களில் நேற்று அதிகாலையில் இராணுவ வீரர்களை ஏற்றிச் சென்ற பேருந்தினை இலக்கு வைத்து நடத்தப்பட்ட இரு குண்டுத் தாக்குதல்களில் 13 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த தாக்குதலினால் மேலும் பலர் காயமடைந்துள்ளதாக சிரிய அரச தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

சிரிய அரச தொலைக்காட்சி மத்திய டமாஸ்களில் எரிந்த பேருந்தின் காட்சிகளைக் வெளிக்காட்டியுள்ளது. பொது மக்கள் வேலை மற்றும் பாடசாலைக்கு செல்லும் பரபரப்பான நேரத்தில் இந்த குண்டுவெடிப்புகள் நிகழ்ந்துள்ளன.

ஒரு காலத்தில் கிளர்ச்சியாளர்களால் கைப்பற்றப்பட்ட புறநகர்ப் பகுதிகளை அரசப் படைகள் கைப்பற்றிய பிறகு, சமீபத்திய ஆண்டுகளில் டமாஸ்களில் இத்தகைய தாக்குதல்கள் அரிதாவையாக இடம்பெறுகிறது.

2011 மார்ச் மாதம் தொடங்கிய சிரியாவின் மோதலில் 3 இலட்சத்து 50ஆயிரத்து இற்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் வெளிநாடுகளில் அகதிகளாக உள்ள ஐந்து மில்லியன் மக்கள் உட்பட நாட்டின் மக்கள் தொகையில் 50 சதவீதம் பேர் இடம் பெயர்ந்துள்ளனர். (7-5)

# இராணுவ ஆட்சிக்கு எதிராக போராடிய 5600 அரசியல் கைதிகளுக்கு விடுதலை

(நைப்பியிதோ)

மியான்மாரில் இராணுவ ஆட்சிக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டு, சிறையில் அடைக்கப்பட்ட 5 ஆயிரத்து 600 பேர் விடுதலை செய்யப்படவுள்ளனர்.


விடுதலை செய்யப்படுவதற்கு முன்னர், நாட்டுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட போவதில்லை என்ற உறுதிமொழிப் பத்திரத்தில் அனைவரும் கையெழுத்திட வேண்டும்' என்று மியன்மார் இராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

நடைபெற்ற பொதுத் தேர்தலில் முறைகேடுகள் நடைபெற்றதாகக் கூறி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை இராணுவம் கடந்த பெப்ரவரி 1 ஆம் திகதி கலைத்தது. அரசின் தலைமை ஆலோசகர் ஆங் சான் சூகி, ஜனாதிபதி வின் மியின்ட் உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் கைது செய்யப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து, ஜனநாயக அரசை மீண்டும் அமைக்க வலியுறுத்தியும் கைது செய்யப்பட்ட அரசியல் தலைவர்களை விடுவிக்கக் கோரியும் மியன்மார் முழுவதும் போராட்டங்கள் நடைபெற்றன.

இந்தப் போராட்டங்களைக் கட்டுப்படுத்துவதற்காக நிகழ்த்தப்பட்ட துப்பாக்கிச் சூடு உள்ளிட்ட வன்முறைச் சம்பவங்களில் 1,100 இற்கும் மேற்பட்டவர்கள் பலியாகினர். மேலும் சுமார் 9,000 போராட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (7-4)

# அத்துமீறிய இந்திய நீர்மூழ்கிக் கப்பலை தடுத்து நிறுத்தியது பாகிஸ்தான்



(இஸ்லாமாபாத்)

தங்கள் கடற்பகுதிக்குள் அத்துமீறி நுழைய முயன்ற இந்திய நீர்மூழ்கிக் கப்பல் தடுத்து நிறுத்தப்பட்டதாக பாகிஸ்தான் இராணுவம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அந்நாட்டு இராணுவம் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பில், "கடந்த 16 ஆம் திகதி பாகிஸ்தான் கடற் பகுதிக்குள் இந்திய கடற்படையின் நீர்மூழ்கிக் கப்பல் அத்துமீறி நுழைய முயன்றது. அதனை பாகிஸ்தான் கடற்படை கண்டறிந்து தடுத்து நிறுத்தியது.

ஏற்கனவே 2016 ஆம் ஆண்டு நவம்பரிலும் 2019 ஆம் ஆண்டு மார்ச்சிலும் இதுபோன்ற சம்பவங்கள் நிகழ்ந்தன" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் கடற்பகுதிக்குள் இந்திய நீர்மூழ்கிக் கப்பல் அத்துமீறி நுழைய முயன்றதாகக் கூறப்படும் சம்பவத்தின் காணொலியையும் அந்நாட்டு இராணுவம் வெளியிட்டுள்ளது.

எனினும் இதுகுறித்து இந்தியக் கடற்படை எந்தக் கருத்தும் தெரிவிக்கவில்லை. (7-4)

# கிராமத்துக்குள் புகுந்து 43 பேர் சுட்டுக்கொலை

(அபுஜா)

மேற்கு ஆப்பிரிக்க நாடான நைஜீரியாவில் போகோ ஹரம் பயங்கரவாதிகள் கடும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.

இவர்களை ஒடுக்க முடியாமல் இராணுவம் போராடி வருகிறது.

இந்த அசாதாரண சூழலை பயன்படுத்தி அங்கு மேலும் பல்வேறு பயங்கரவாத குழுக்கள் உருவாகியுள்ளன.

இவர்கள் கிராமங்களுக்குள் புகுந்து அப்பாவி மக்களை கொன்று குவிப்பதோடு, கொள்ளை மற்றும் வழிப்பறி சம்பவங்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் வட மேற்கு மாகாணம் சோ கோட்டோவில் உள்ள கோரோனியோ நகருக்குள் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு பயங்கரவாதிகள் புகுந்து கொடூரத் தாக்குதலை நடத்தியதில் 30 பேர் கொன்று குவிக்கப்பட்டனர். இந்த பரபரப்பு அடங்குவதற்குள் திங்கட்கிழமை சோகோட்டோ மாகாணத்தில் உள்ள ஒரு கிராமத்துக்குள் பயங்கரவாதிகள் புகுந்து தாக்குதல் நடத்தினர்.

மோட்டார் சைக்களில் வந்த 100இற்கும் மேற்பட்ட பயங்கரவாதிகள் கிராம மக்கள் மீது கண் மூடித்தனமாக துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

பயங்கரவாதிகளுக்கு பயந்து மக்கள் வீடுகளுக்குள் சென்று கதவை பூட்டிக்கொண்ட போதிலும், பயங்கரவாதிகள் கதவுகளை உடைத்து வீடுகளில் இருந்தவர்களை வெளியே இழுத்து வந்து சுட்டுக்கொன்றதாக கூறப்படுகிறது.

பயங்கரவாதிகளின் இந்த அட்டூழியத்தால் பெண்கள், சிறுவர்கள் உட்பட 43 பேர் கொல்லப்பட்டனர். மேலும் பலர் படுகாயமடைந்தனர். (7-5)

# மைதான விளையாட்டுக்களினால் கொவிட்-19 பரவும் அபாயமுண்டு

## சுகாதாரப் பிரிவினர்

(குருமன்காடு)

வவுனியா நகரசபை விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும் விளையாட்டுப் போட்டிகளினால் கொரோனா பரவும் அபாயம் உள்ளதாக சுகாதார பிரிவினர் தெரிவித்தனர்.

வவுனியாப் பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் கு.திலீபன் தலைமையில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டது.

மேலும் தெரிவிக்கப்பட்டதாவது, கொவிட் -19 சூழ்நிலை காரணமாக விளையாட்டு நிகழ்வுகள் உட்பட பல விடயங்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. தவிரக்க முடியாத சில காரணங்களினால் விளையாட்டு வீரர்கள் முகக் கவசமின்றியே விளையாட்டில் ஈடுபடுகின்றனர்.

மேலும் பார்வையாளர்களும் அப்பகுதியில் குழுமி காணப்படுகின்றனர். இவ்விடயங்கள் காரணமாக கொவிட் -19 தொற்றுப் பரவும் அபாய நிலை காணப்படுகின்றது.

சுகாதார பிரிவினரின் அனுமதியின்றி சுற்றுப்போட்டிகள் இடம்பெறு கின்றன.

சுகாதார விதிமுறைகளை மீறி செயற்பட்டால் சட்ட நடவடிக்கைக்கு செல்ல வேண்டிய நிலை உருவாகும் என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

இதனையடுத்து, பொலிஸாரின் உதவியுடன் நகரசபையினர் பார்வையாளர்கள் ஒன்று கூடுவதினை தவிர்க்க வேண்டும் எனவும், இனி வரும் காலங்களில் எந்தவொரு விளையாட்டு நிகழ்வும் சுகாதாரப் பிரிவினரின் அனுமதியுடனே இடம்பெற வேண்டுமெனவும் தெரிவித்தார். (7-5-250)

# சேதனப் பசளைக்கான கேள்வி அதிகரித்துள்ளது

## யாழ்.மாநகரசபை ஆணையாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபை மீள் சுழற்சி மையத்தில் உருவாக்கப்படும் சேதனப் பசளைக்கான கேள்வி அதிகரித்துள்ளதாக யாழ்ப்பாண மாநகர சபையின் ஆணையாளர் த.ஜெயசீலன் தெரிவித்தார்

யாழ்ப்பாண மாநகர சபை சேதனப் பசளை உற்பத்தி தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். சேதனப் பசளை உற்பத்தி என்பது யாழ். மாநகர சபையின் மீள் சுழற்சி மையத்தில் தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. "வீரியம்" என்ற பெயரில் யாழ்ப்பாண மாநகர சபைக்கு சொந்தமான மீள் சுழற்சி மையத்தில் சேதன பசளை உற்பத்தி செய்யப்பட்டு ஒரு கிலோ 20 ரூபாய் விலையில் விற்கப்படுகிறது.

ஆர்வமுள்ளவர்கள் மாநகரசபைமீள் சுழற்சி மையத்தில் உருவாக்கப்படும் சேதனப் பசளையினை மீள் சுழற்சி மையத்திலும் மற்றும் ஏனைய திரட்டு அலுவலங்களிலும் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவித்தார். (7-5-33)

# வனவளத் திணைக்களப் பிடியில் உள்ள 550 ஏக்கர் வயற்காணிகளும் வேண்டும்

## ஜெயபுரம் மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

பூநகரி ஜெயபுரம் கிராம மக்கள் வயற் காணிக்காக தொடர்ந்து போராட வேண்டிய நிலையில் உள்ளனர்.

2010 ஆம் ஆண்டில் இருந்து வயற்காணிகளை வழங்குமாறு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த நிலையில் வனவளத் திணைக்களத்தின் பிடியில் இருந்து 130 ஏக்கர் வரையான காணி அண்மையில் விடுவிக்கப்பட்டு பூநகரி பிரதேச செயலகம் காணிகளை பகிர்ந்தளித்தது.

ஆனாலும் குறித்த காணிகளுக்கு வன்னேரிக் குள கிராம மக்களும் உரிமை கோருவதன் காரணமா[illegible] விடுவிக்கப்பட்ட 130 ஏக்கரில 30 ஏக்கர் வரையான நிலப்பரப்பில் பயிர்ச் செய்கை மேற்கொள்ள முடியாத நிலையில் ஜெயபுரம் மக்கள் உள்ளனர்.

550 ஏக்கர் காணிக்காக போராடிய ஜெயபுரம் மக்கள் தற்போது 130 ஏக்கரை முதற் கட்டமாக பெற்றுள்ள போதிலும் [illegible] நிலத்திலும் முழுமையாக [illegible]ரிர்ச் செய்கையில் ஈடுபட முடியவில்லை என கவலைத் தெரிவிக்கின்றனர். (7-5-350)

# முல்லைத்தீவு பொது மைதானம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்


## கரைத்துறைபற்று பிரதேசசபை உறுப்பினர்

(அக்கராயன்)

முல்லைத்தீவு பொது மைதானம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என கரைதுறைபற்று பிரதேச சபை உறுப்பினர் த.அமலன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது. முல்லைத்தீவு பொது மைதானத்தினை புனரமைப்பதற்கு நிதி மத்திய அரசினால் ஒதுக்கப்பட்டுள்ளதாக அறிகின்றோம். இந் நிதி மூலம் சகல வளங்களையும் கொண்ட பொது மைதானம் முல்லைத்தீவில் அமைய வேண்டும்.

மாவட்டச் செயலகத்திற்கு முன்னால் எமது பிரதேச சபைக்கு அருகில் பொது மைதானத்திற்குரிய காணி உள்ளது. கடந்த பத்தாண்டுகளில் சொல்லும்படியான அபிவிரு த்திப் பணிகள் இம் மைதா னத்தில் இடம் பெறவில்லை.

இந்நிலையில் முல்லைத்தீவு பொது மைதானத்தினை புனரமைப்பதன் மூலம் பெரும் நன்மைகள் உருவாகும். இதற்கான நடவடிக்கைகளை உரிய அதிகாரிகள் எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.(7-5-350)



வவுனியா பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதிகளில் யுத்தத்தில் பாதிக்கப்பட்ட தெரிவு செய்யப்பட்ட 80 குடும்பங்களுக்கு நேற்றுமுன்தினம் பாராளுமன்ற உறுப்பினர் கு. திலீபனால் காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டது. (படம்-சதீஸ்)

# கோவிற் குடியிருப்பின் வெள்ளப் பிரச்சினைக்கு தீர்வுகாண 1.5 மில்.ரூபாய் நிதி ஒதுக்கீடு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி-கோவிற்குடியிருப்பு கிராம மக்களின் வெள்ளப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண அரசாங்கத்தின் கிராமத்திற்கான நிதி ஒதுக்கீட்டில் இருந்து 1.5 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



அண்மையில் கோவிற் குடியிருப்பு ஜே/301 கிராம உத்தியோகத்தர் பிரிவில் இடம்பெற்ற கிராமத்துடனான கலந்துரையாடல் நிகழ்ச்சித் திட்டத்தின் போது கோவிற்குடியிருப்பு கிராமத்தில் உள்ள உப்புக்கேணிக் குளம் நீண்ட காலமாக எந்த விதமான பராமரிப்பும் இன்றிக் காணப்படுவதால் மாரி காலத்தில் சுமார் 200 குடும்பங்கள் வரை வெள்ளத்தால் பாதிக்கப்படுவதாகவும் அதனால் வெள்ளப் பிரச்சினைக்கு தீர்வுகாண உப்புக்கேணிக் குளத்தினை ஆழுப்படுத்தி, பாதுகாப்புச் சுவர் அமைக்க வேண்டும் எனக் கோரியிருந்தனர்.

இந் நிலையில் கூட்டத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்த மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் அங்கஜன் இராமநாதனால் உப்புக்கேணிக் குளம் சீரமைக்க கிராமத்திற்கான 2022 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் இருந்து 1.5 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் மேலதிக நிதி தேவைப்படின் அதற்கான நிதி ஒதுக்கீடும் வேறு நிதி மூலம் ஊடாக மேற்கொள்ளத் தயாராக இருப்பதாகவும் உறுதியளித்திருந்தார்.

மேலும் உப்புக்கேணிக் குளத்தின் மேலதிக நீர் கச்சாய் கடலினைச் சென்றடைய நிரந்தர வடிகாலமைப்பு ஏற்படுத்த வேண்டிய தேவைப்பாடு காணப்படுவதாகவும் பொது மக்களினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (7-5-30)

# அம்பலவன் பொக்கணையில் சட்டவிரோத மணல் அகழ்வு



(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவின் அம்பலவன் பொக்கணை கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் மற்றும் பனையடி வெள்ளாமுள்ளி வாய்க்கால் பிரதேசத்திலும் மணல் அகழ்வு நடைபெறுவதாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் கிராமங்களிற்குள் கடல் நீர் உட்புகும் அபாயமும் ஏற்படும்.

எனவே சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மணல் அகழ்வை தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (7-5-350)



# புனரமைக்கப்பட்ட வீதி பயன்படுத்த முடியாத நிலையில்

(தருமபுரம்)

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தருமபுரம் பகுதியிலுள்ள வீதி கடந்த வருடம் 2மில்லியன் செலவில் புதிதாக புனரமைக்கப்பட்டது. 200 மீற்றர் வீதி தற்பொழுது ஒரு வருடம் கடந்த நிலையில் வீதியால் நடைபாதசாரிகள் கூட பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய தீர்வினை பெற்றுத்தர வேண்டும் என மக்கள் தெரிவித்துள்ளனர் . (7-5-316)

# ஐப்பசி மாத இராசி பலன்கள்

## 18.10.2021-16.11.2021

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

## புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்



நண்பர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் சிம்ம இராசி வாசகர்களே!

ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சூரியன் நீச்சம் பெற்று சஞ்சரிக்கிறார். தனாதிபதி புதன் உச்சம் பெற்றும், குருவின் பார்வை பதிந்தும் உங்கள் இராசி புனிதமடைகிறது. எனவே பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

**துலாம் - செவ்வாய் சஞ்சாரம்**

ஐப்பசி 6 ஆம் திகதி, துலாம் இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு 4, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான அவர், சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் போது மனையால் ஆதாயம் கிடைக்கும். தொழிலில் லாபம் வந்துசேரும். ஆற்றல்மிக்க கூட்டாளிகளும், ஆன்மிகப் பெரியோர்களும் உங்கள் அருகில் இருந்து, உங்களை வெற்றி பெறச் செய்வர்.

**சனி - செவ்வாய் பார்வை**

ஐப்பசி 7 ஆம் திகதி முதல், துலாத்தில் உள்ள செவ்வாயை, மகரத்தில் உள்ள சனி பார்க்கப் போகிறார். இது அவ்வளவு நல்லதல்ல. என்றாலும் செவ்வாயைப் பார்க்கும் சனியோடு குரு இருப்பதால், குடும்பத்தில் சுப காரியங்கள் கைகூடும். பிள்ளைகளின் வேலை வாய்ப்பு தொடர்பான முயற்சி வெற்றி பெறும். மனை விற்பனையால் தன இலாபம் கிடைக்கும்.

**பொன்னான புதன் பெயர்ச்சி**

ஐப்பசி 13 ஆம் திகதி, துலாம் இராசிக்குப் புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 2, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான அவர், சூரியனோடு இணைந்து 'புத - ஆதித்ய யோக'த்தை உருவாக்குகிறார். இந்த நேரத்தில் சகோதர ஒற்றுமை பலப்படும். வழக்குகள் சாதகமாகும். தேவைக்கேற்ப பணம் வந்துசேரும்.




உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு, பிரபல நிறுவனங்களில் இருந்து அதிக சம்பளத்தில் அழைப்புகள் வரலாம்.

**தனுசு - சுக்கிரன் சஞ்சாரம்**

ஐப்பசி 14 ஆம் திகதி, தனுசு இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். இதன் விளைவாக பிள்ளைகள் வழியில் நல்ல சம்பவங்கள் நடைபெறப் போகிறது. தொழில் ஸ்தானாதிபதி சுக்கிரன், புத்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் பிள்ளைகளுக்கு வேலை கிடைக்கும். ஆடை - ஆபரணச் சேர்க்கை உண்டு. தொழிலில் புதிய ஒப்பந்தங்களும், உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சலுகைகளும் கிடைக்கும்.

**கும்ப - குரு சஞ்சாரம்**


ஐப்பசி 27 ஆம் திகதி, குரு பகவான் கும்ப இராசிக்கு பெயர்ச்சியாகிறார். அவரது பார்வை உங்கள் இராசியில் பதிகின்றது. எனவே தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொல்லை தந்த எதிரிகள் விலகுவர். வருமானப் பற்றாக்குறை அகலும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் பணவரவு திருப்தி தரும். கொடுக்கல்- வாங்கல்களை ஒழுங்கு செய்வீர்கள். கணவன் - மனைவிக்குள் அன்பு அதிகரிக்கும். பிள்ளைகளின் எதிர்காலக் கனவுகளை நனவாக்குவீர்கள்.

சுபகாரியப் பேச்சு நல்ல முடிவிற்கு வரும். வீடு கட்டுவது, வாங்குவது பற்றி முடிவெடுப்பீர்கள். தாய் வழி ஆதரவு திருப்தி தரும். பணிபுரியும் பெண்களுக்கு, திறமைக்கான அங்கீகாரம் கிடைக்கும். சம்பள உயர்வும் தானாக வந்துசேரும். இம்மாதம் ஞாயிற்றுக்கிழமைகளில் சூரிய பகவானை வழிபடுங்கள்.

## சென்ற மாதத்தைக் காட்டிலும் இந்த மாதம் சிறப்பாக அமையும்



எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்யும் கன்னி இராசி வாசகர்களே!

ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் புதன் உச்சம் பெற்று உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கிறார். உங்கள் இராசியைக் குரு பகவான் பார்க்கிறார். எனவே சென்ற மாதத்தைக் காட்டிலும் இந்த மாதம் சிறப்பாக அமையும்.

**துலாம் - செவ்வாய் சஞ்சாரம்**

ஐப்பசி 6 ஆம் திகதி துலாம் இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு 2ஆம் இடமான தன ஸ்தானத்தில் செவ்வாய் சஞ்சரிக்கும் பொழுது, சகோதர வழியில் மனக்கசப்பு உருவாகலாம். 3, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய் என்பதால் உறவினர் பகை வரலாம். அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்ல வேண்டிய நேரம் இது.

**சனி - செவ்வாய் பார்வை**

ஐப்பசி 7 ஆம் திகதி முதல், துலாத்தில் உள்ள செவ்வாயை, மகரத்தில் உள்ள சனி பார்க்கப் போகிறார். இது அவ்வளவுநல்லதல்ல. குடும்பத்தில் குழப்பங்கள் அதிகரிக்கும். கொடுக்கல் - வாங்கல்களில் பற்றாக்குறை ஏற்படும். பணிபுரியும் இடத்தில் மேலதிகாரிகளின் வெறுப்புக்கு ஆளாவீர்கள். குடும்பத்தில் மருத்துவச் செலவு கூடும்.

**பொன்னான புதன் பெயர்ச்சி**

ஐப்பசி 13 ஆம் திகதி, துலாம் இராசிக்குப் புதன் செல்கிறார். இதன் விளைவாக நல்ல வாய்ப்புகள் உங்களைத் தேடி வரப்போகிறது. இராசிநாதன் தன ஸ்தானத்திலுள்ள சூரியனோடு இணைந்து 'புத - ஆதித்ய யோக' த்தை உருவாக்குகிறார். எனவே பொருளாதார




நிலை உயரும். புதிய பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள்.

**தனுசு - சுக்கிரன் சஞ்சாரம்**

ஐப்பசி 14 ஆம் திகதி, தனுசு இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். இதனால் தாய் வழி ஆதரவு கிடைக்கும். ஆடை- ஆபரணச் சேர்க்கை ஏற்படும். மங்கல நிகழ்ச்சி மனையில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும். பயணங்களால் பலன் கிடைக்கும். புதிய வாகனம் வாங்குவதற்கான யோகம் உண்டு. சொத்து விற்பனையால் இலாபம் கிடைக்கும். சொந்தங்கள் மூலம் உதவி வந்துசேரும்.

**கும்ப - குரு சஞ்சாரம்**

ஐப்பசி 27 ஆம் திகதி, குரு பகவான் கும்ப இராசிக்கு பெயர்ச்சியாகிறார். அவரது பார்வை, உங்கள் இராசிக்கு 2, 10, 12 ஆகிய இடங்களில் பதிவதால் விரயத்திற்கேற்ற வரவு வந்து சேரும். வீடு மாற்றங்கள், இடமாற்றங்கள் நன்மை தரும். 6 ஆம் இடத்தில் குரு சஞ்சரிப்பதால் கடன் சுமை ஏற்பட்டாலும், அதைச் சமாளிக்கும் ஆற்றல் பிறக்கும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் ஆரோக்கியம் சீராகும். கரைந்த சேமிப்புகளை ஈடு கட்டுவீர்கள். கணவன் - மனைவிக்குள் அன்பு அதிகரிக்கும். பிள்ளைகளால் பெருமை வந்து சேரும். படித்து முடித்தவர்களுக்கு நல்ல வருமானம் தரும் வேலை கிடைக்கும். சுபகாரியங்கள் குருப் பெயர்ச்சிக்குப் பிறகு நடைபெறும். சொத்துக்கள் வாங்கும் யோகமுண்டு. பணிபுரியும் இடத்தில் இருந்த பிரச்சினைகள் படிப்படியாக அகலும். சம்பள உயர்வு கிடைப்பதற்கான அறிகுறி தோன்றும். இம்மாதம் புதன்கிழமைகளில் அனுமனைவழிபடுங்கள் (தொடரும்..)

# வாசனைத் திரவியங்களின் விலை

## உள்நாட்டு சந்தையில் உயர்வு

(கொழும்பு)

**கறுவா, மிளகு, சாதிக்காய், கராம்பு மற்றும் கோப்பி உள்ளிட்ட பிரதான ஏற்றுமதி பயிர்களின் விலையும் உள்நாட்டு சந்தையில் அதிகரித்துள்ளன.**



அதற்கமைய, உள்நாட்டுச் சந்தையில் 500 ரூபாயாக விற்பனை செய்யப்பட்டு வந்த மிளகு கிலோவொன்றின் விலை தற்போது 900 ரூபாயாக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுதவிர, கறுவா ஒரு கிலோகிராம் 3400 ரூபாயாகவும் கராம்பு ஒரு கிலோ கிராம் 1400 ரூபாயாகவும் அதிகரித்துள்ளன.

அத்துடன், ஒரு கிலோ கிராம் கோப்பி 1250 ரூபாயாக அதிகரித்துள்ளதோடு, ஒரு கிலோ பாக்கு ஆயிரம் ரூபாயாக அதிகரித்துள்ளதாக ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி-5)

## சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு

(கொழும்பு)

ஒக்டோபர் மாதம் 1 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரையில் 7 ஆயிரத்திற்கு அதிகமான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாகச் சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

7,096 சுற்றுலாப் பயணிகள் குறித்த காலப் பகுதிக்குள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இந்தியா, கஜகஸ்தான், ஜேர்மன், உக்ரேன், சீனா, கனடா, அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளில் இருந்து இவ்வாறு சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-5)

## மாகாணசபைத் தேர்தலில் கிரியெல்லவின் மகள்?

(ஹற்றன்)

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் மத்திய மாகாணசபை முதலமைச்சர் வேட்பாளராக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்லவின் மகள் சமிந்த்ராணி கிரியெல்ல போட்டியிடவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.



கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மத்திய மாகாண சபைக்கான முதலமைச்சர் வேட்பாளர் பதவிக்கு இவரின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (நி-5)

## ஓமானிடம் இருந்து 3.6 பில்லியன் டொலர் கடன்

(கொழும்பு)

3.6 பில்லியன் டொலர் கடனை ஓமானிடம்இருந்து பெற்றுக் கொள்வதற்கான ஒப்பந்தம் அடுத்த வாரம் கைச்சாத்திடப்படும் என எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

5 வருடத்திற்கு ஒருமுறை என்ற அடிப்படையில் 20 வருட காலத்திற்குள் அக் கடனை செலுத்தும் வகையில் இந்த ஒப்பந்தம் அமையும் என அமைச்சர் தெரிவித்தார்.

உலகளவில் எரிபொருள் விலை கடுமையாக அதிகரித்துள்ள நிலையில் நாட்டுக்குத் தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதாகவும் தற்போது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஒரு லீற்றர் டீசலுக்கு 35 ரூபாய் மற்றும் ஒரு லீற்றர் பெற்றோலுக்கு 18 ரூபாய் இழப்பை சந்தித்து வருகிறது என்றும் அவர் தெரிவித்தார். (நி-5)

## இன்று ஒரு தகவல்

# நினைவாற்றல்

மனிதனுக்கு மிகப் பெரிய நஷ்டங்களை ஏற்படுத்துபவை இரண்டே இரண்டு தான். ஒன்று, சோம்பல்; மற்றொன்று நினைவாற்றல் இன்மை.

ஒரு மாணவருக்கு இருக்கும் நினைவாற்றலின்மையால் ஒரு வருடமே வீணாகிறது. ஒரு தொழிலதிபருக்கு இருக்கும் நினைவாற்றலின்மையால் பல இலட்சங்கள் வீணாகின்றன.

தமக்கு நினைவாற்றல் இல்லையே என்று வருந்தும் பலர், அதை நிவர்த்தி செய்ய எந்த விதமான முயற்சியையும் எடுத்துக் கொள்வதில்லை.

கெய்ரோவில் ஒரு முகமதியக் கல்லூரி இருக்கிறது. அங்குப் பயிலும் மாணவர்கள் அனைவரும் திருக்குர்ஆனை அப்படியே ஒப்பிக்கிறார்கள். சாதாரண காரியமா? மூன்று நாள்கள் ஆகும்!

முயன்றால் முடியாதது இல்லை. பயிற்சி அளிக்க அளிக்க நம் மூளை நினைவாற்றலை நன்கு வளர்த்துக்கொள்ளுகிறது.

நினைவாற்றலை வளர்த்துக்கொள்ளுவது எப்படி என்ற தலைப்பில், ஒரு புத்தக அளவில் எழுதுமளவிற்கு விடயம் இருக்கிறது. இருந்தாலும் சில அடிப்படை விடயங்களை மட்டும் பார்ப்போம்.

எந்த ஒரு காரியம் ஒப்படைக்கப்பட்டாலும் அதை உடனே செய்து முடிக்க வேண்டும். தள்ளிப் போட்டால் நிச்சயம் மறந்து விடும்.

பல நாள் கழித்துச் செய்ய வேண்டிய காரியங்களைக் கையோடு குறித்துக்கொள்ள வேண்டும். இதற்கென்று ஒரு சிறு டைரியையும் பேனாவையும் எப்போதும் கையில் வைத்திருக்க வேண்டும், ரெலிபோன் எண்கள், விலாசங்கள் ஆகியவற்றை அவ்வப்போது குறித்துக்கொள்ள இது உதவும்.

“அலுமாரிச் சாவியை எங்கே வைத்தோம். தெரியவில்லையே!” என்று வீட்டையே தலைகீழாக ஆக்குபவர்கள் உண்டு. ஒவ்வொரு நிமிடமும் நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம். என்று உணர்ந்து செயல்பட்டால் மறப்பதற்கு வாய்ப்பில்லை.

அதாவது, இதோ பூஜை அறைக்குள்வருகிறோம். என் வலக்கையில் சாவி இருக்கிறது. என்ன இது? பூஜை அறையின் தட்டில், கண்ட கண்ட பொருள்கள் இருக்கின்றனவே சரி, சாவியைக் கண்ணெதிரே வைப்பது நல்லதல்ல என்று எண்ணுகிறோம். எனவே, இந்த “அழகான, பிள்ளையார் படத்தின் பின்னால் சாவியை வைக்கிறோம். சாமி படத்திற்குப் பின்னால் சாவியை வைத்தால் அது சாமான்யத்தில் எவர் கண்ணிலும் படாது!” சாமி-சாவி-சாமான்யம் இதை உணர்ந்து செயற்பட்டால் சாவி வைத்த இடம் மறக்காது.

சாவியை வைக்கும் நேரத்தில் கபில்தேவ் சிக்ஸர் அடித்த காட்சியை எண்ணிக் கொண்டிருந்தால் எப்படி நினைவு வரும்? படிக்கும் மாணவர்கள் சிந்தனையைச் சிதறிவிடாமல் நன்கு புரிந்து கொண்டு மீண்டும் மீண்டும் படித்தால் ஒரு காலமும் எதுவும் மறக்காது.

நினைவில் வைத்துக்கொள்ளவேண்டிய பொருளையும் மற்ற ஒரு பொருளையும் சம்பந்தப்படுத்தி இணைத்துக் கொள்வதும், அவற்றின் இடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை எண்ணிப் பார்ப்பதும் நினைவாற்றலைப் பெருக்கும்.


நினைவாற்றலை வளர்த்துக்கொள்ள விரும்பினால் மிகுந்த முயற்சி வேண்டும். இதாவது நினைவில் இருக்குமா, இல்லை, இதுவும் மறந்து போகுமா?

**லேனா தமிழ்வாணன்**



# சிறுவர் அரங்கம்

## பலமும் பலவீனமும்



வேகமாக ஓடிய நரி.. கடைசியில் காட்டுக்குள் காட்டு அதிகாரிகள் போட்டு வைத்திருந்த் பெரிய பெரிய பைப்புகளுக்குள் நுழைந்து ஓட, சிங்கமும் வேகமாக நுழைந்து விட்டது.

பைப் துவாரம் சிங்கம் நுழையும் அளவுக்குத்தான் இருந்தது. சிங்கம் பைப்புக்குள் போய் மாட்டிக் கொண்டு வெளியே வரமுடியாமல் திணறியது.

அப்போது நரி அலட்சியமாக சிங்கத்தை பார்த்து "எப்படி நம்ம டெக் னிக்? நீ இப்போ சிங்கம் இல்லை. அசிங்கம். நம்மகிட்ட வச்சுக்காதே அவ் வளவு தான்" என்று சொல்லியபடி தன் காலால் சிங்கத்தின் வால் பகுதியில் ஒரு அடி அடித்தது. அப்போது தாய் சிங்கத்தை தேடி ஓடி வந்த குட்டி சிங்கங்கள் அங்கே வர...

உடனே நரி...குட்டி களை பார்த்து கோப மாக...

"நான் சொல்லியும் உங்க ஆத்தா கேக்கலே... பாத்தியா... என்கிட்ட வாலாட்டினா வாலை ஒட்ட நறுக்கிடுவேன் ஜாக்கிரதை"என்று மிரட்ட, குட்டிகள் பைப்புக்குள் போய் தாய் சிங்கத்தை பரிதாபமாக பார்த்துவிட்டு நின்றன.

நரி "இனிமே நான் தான் இந்த காட்டுக்கு ராஜா" என்று சிங்கம் முகத்துக்கு முன்னால் சொல்லி வெறுப்பேற்றி விட்டு ஓடி விட்டது.

நாம பலசாலியாக இருந்தாலும் நமக்கு இணையான எதிராளிகளிடம்போட்டி போடலாம். சண்டை போடலாம். ஆனா பலம் பலவீனத்தோட மோதும் போது கவனமாக செயல்படணும், ஜெயிச்சாலும் தோற்றாலும் பலசாலிக்குத்தான் அவமானம். எதிராளியின்தரமறிந்து செயல்படுவது புத்திசாலித்தனம்!

(முற்றும்)

# மகாபாரதம்

220



அப்படி வேடனால் பிடிக்கப்பட்டு துன்புறும் போதும் அந்தப் பெண் புறா தன் ஆண் புறாவை நோக்கிக் கூறத் தொடங்கியது.

"உமது நலனுக்காக சிலவற்றைக்கூறுகிறேன். அடைக்கலம் என யார் வந்தாலும் அவர்களை நன்கு உபசரிக்க வேண்டும்.

வேடன் ஒருவன் உமது இடம் வந்து குளிராலும், பசியாலும் துன்புற்றுப் படுத்திருக்கிறான்.

அவனுக்கு வேண்டிய உதவிகளை நீர் தர வேண்டும். புறாக்களுக்கு உரிய தருமம் நீர் அறியாததல்ல.

இல்லறத்தான் ஒருவன் தன் சக்திக்கு மீறி தர்மம் செய்வான் என்றால், மறுமையில் அளவில்லாத இன்பத்தை அவன் அடைவான்.

நீர் உமது உடம்பின் மீது உள்ள பற்றை விட்டு விட்டு, அறத்தின் மீது பற்றுக் கொண்டு இந்த வேடன் மகிழ்ச்சி அடையும்படி செய்யுங்கள்.

என்னை நினைத்து வருந்த வேண்டாம்என்று கூறிய பெண்புறா தலையை உயர்த்தித் தன் கணவனின் செய்கையைக் கூர்ந்து கவனித்தது. நுணுக்கமாக உபதேசம் செய்த பெண் புறா வின் சொற்களைக் கேட்ட ஆண்புறா மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தது. அந்த வேடனை வணங்கி.. "உமது வரவு நல்வரவாகட்டும். நீர் இப்போது என் விருந்தினர். விருந்தினரை உபசரிப்பது கடமை. வீட்டிற்கு வந்தவன் பகைவனாய் இருந்தாலும்கூட அவனைக் காப்பதே கடமை யாகும்.

பெரிய மரமானது, தன்னை வெட்டி வீழ்த்துபவனுக்கும் நிழல் தரத் தவறுவதில்லை. ஆகவே உமக்கு என்ன வேண்டும் என்று சொல்லவும். அதை நிறை வேற்றுகிறேன்.." என்றது.

வேடனும் "என்னால் குளிரைத் தாங்க முடியவில்லை. அதனைப் போக்கவும்" என்றான்.

உடனே புறா, உலர்ந்த சுள்ளிகளையும், சரகுகளையும் கொண்டு வந்து குவித்து, தேடி அலைந்து நெருப்பையும் கொணர்ந்து தீ மூட்டியது.

வேடன் குளிர் நீங்கியதும் அவனுக்கு பசிக்க ஆரம்பித்தது. "எனக்கு பசிக்கிறது" என்றான் வேடன். (தொடரும்)

ஒவ்வொரு மனிதனும் கோதுமைப் பயிராகவோ அல்லது களைச் செடியாகவோ வளர்ச்சி பெறுவது அவன் நேற்று விதைத்த விதைகளை – எண்ணங் களை – ஒட்டித்தான்! – பார்பௌர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# அறம் காத்த மடங்கள் மீண்டும் புத்துயிர் பெறட்டும்

எம் மூதாதையர்களின் வாழ்வியல் பற்றி சிந்தித்தால், மனிதநேயத்தைக் காப்பாற்றுவதில் நம்மவர்கள் காட்டிய கருசனை எத்துணை உயர்வானதென்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

இதற்கு மேலாக ஜீவகாருண்யத்தின் மீது அவர்கள் கொண்டிருந்த கருசனையும் தெரிய வரும்.

ஆம், அடிப்படை வசதிகள் இல்லாத அந்தக் காலத்தில்; வாகனம் இல்லை. ஆன வீதிகள் இல்லை, குடிநீர் வசதிகள் இல்லை, ஏன்? இராப்பொழுதில் வீதி வெளிச்சம் இல்லை, இரவு நேரமாகிவிட்டால் எங்கு தங்குவது என்ற ஏக்கம் என ஏகப்பட்ட பிரச்சினைகளுக்கு மக்கள் முகம் கொடுக்க வேண்டியதாயிற்று.

இதன்போது அதற்கான தீர்வை மக்களே முன்வைத்தனர்.

ஒவ்வொரு வீடுகளின் முன்புறத்திலும் திண்ணைகள் அமைத்து வழிப்போக்கர்கள் காலாறிப் போவதற்கு ஏற்பாடு செய்தவர்கள், தலையில் சுமைகளைத் தாங்கி வருபவர்கள் அவற்றை இறக்கி நிலத்தில் வைத்தால் மீளவும் அந்தப் பாரத்தைத் தூக்குவதற்கு முடியாமல் கஷ்டப்படுவர் என்பதற்காக சுமைதாங்கிகளை அமைத்து உதவி செய்தனர்.

இதேபோல தெருக்களிலும் ஆலய வெளி வீதிகளிலும் விளக்கேற்றி வெளிச்சம் கொடுத்தனர்.

இவையாவற்றுக்கும் மேலாக, நடந்து களைத்தவர்கள், தங்க இடமற்றவர்கள் உண்ணவும் ஆற அமரவும் உறங்கவுமென மடங்களையும் சத்திரங்களையும் அமைத்து மிகப்பெரும் அறப் பணியை நம்மவர்கள் ஆற்றி நின்றதனை அறியும்போது எங்களை அறியாமலே எங்கள் தமிழ்ப் பண்பாட்டின் உயர்வு கண்டு எங்கள் தோள்புயங்கள் உயருகின்றன.

இவ்வாறு நம் முன்னோர்கள் ஆற்றிய அறப்பணிகள் பலவற்றுக்கு நாம் விடை கொடுத்துவிட்டோம்.

இதற்கு சமகால வசதி வாய்ப்புகளும் காரணமாக இருக்கலாம்.

ஆனால் எங்கள் முன்னோர்கள் தங்கள் சொத்துக்களை ஈகை செய்து அமைத்துத் தந்த மடங்கள் சூரிய சந்திரர் இருக்கும் காலம் வரை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதுதான் நம் தாழ்மையான கோரிக்கை.

ஆம் கந்தர்மடம், மருதனார்மடம், நாவலர் மடம், தெருமூடிமடம் என்ற வரிசையில் கீரிமலை சிறாப்பர்மடம் மீண்டும் புத்துருவாகி இருப்பது மனதுக்கு ஆறுதலையும் தேறுதலையும் தருகிறது.

இதேபோல எங்கெல்லாம் மடங்கள், சத்திரங்கள் அமைக்கப்பட்டிருந்தனவோ அவை மீண்டும் நிர்மாணிக்கப்பட வேண்டும்.

அவ்வாறு மடங்கள் மீண்டும் நிர்மாணிக்கப்படுமாயின், அஃது விபரீத முடிவுகளை எடுக்கின்றவர்களைக்கூட ஆற அமர வைத்து ஆற்றுப்படுத்தி, மகனே! நீ வாழப் பிறந்தவன் என்று முதுகை தட்டிக் கொடுக்கும்.

ஆகையால் எங்கள் முன்னோர்கள் அமைத்த அந்த மடங்களின் பண்பாடு மீண்டும் உயிர்ப்புப் பெறட்டும்.

# எரிபொருளுக்கு விரைவில் தட்டுப்பாடு ஏற்படலாம்

## எண்ணெய் தொழிற்சங்க கூட்டமைப்பு

(கொழும்பு)

கனிய எண்ணெய் கூட்டுத்தாபனத்தில் டொலர் இன்மையால் எரிபொருள் கொள்வனவு செய்வது தொடர்பில் தொடர்ந்தும் சிக்கல் நிலவுவதாகக் கனிய எண்ணெய் தொழிற்சங்க கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

கனிய எண்ணெய் பொது சேவையாளர் சங்கத்தின் தலைவர் அஷோக ரன்வல இதனைத் தெரிவித்துள்ளார்.

கனிய எண்ணெய் கூட்டுத்தாபனமானது கையிருப்பில் உள்ள நிதியைக் கொண்டு நாளாந்தம் எரிபொருளைக் கொள்வனவு செய்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக எரிபொருளுக்கான தட்டுப்பாடு ஏற்படக்கூடும்.

எனவே, சர்வதேச நாடுகளுடன் ஒன்றிணைந்து எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்கான உரிய வேலைத் திட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என கனிய எண்ணெய்பொது சேவையாளர் சங்கத்தின் தலைவர் அஷோக ரன்வல தெரிவித்துள்ளார். (ம)

# அதிபர் - ஆசிரியர்களின் சம்பளத்தை முடிந்தால் குறைத்துக் காட்டுங்கள்

## ஆசிரியர் சங்கம் சவால்

(கொழும்பு)

பாடசாலைகளில் கல்வி நடவடிக்கையில் ஈடுபடாத ஆசிரியர்களின் சம்பளத்தை குறைக்கப் போவதாக வடமேல் ஆளுநர் தெரிவித்துள்ள கருத்திற்கு ஆசிரியர் சங்கம் எதிர்ப்பை தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் நேற்று பல்வேறு ஊடகவியலாளர் சந்திப்புக்கள் இடம்பெற்றிருந்தன.

இதன்போது கருத்து தெரிவித்த குருணாகல் மாவட்ட ஆசிரியர் சங்க தலைவர் சரத் பிரேமசிறி, முடிந்தால் அதிபர் - ஆசிரியர்களின் சம்பளத்தை குறைத்து காட்டுமாறு சவால் விடுத்துள்ளார்.

இதேவேளை, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சம்பளத்தை குறைக்க விடப்போவதில்லை என ஆசிரியர் சங்கத்தின் பிரதான செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார். (ம)

## வவுனியாவில் 21 பேர் உட்பட

# வடமாகாணத்தில் மேலும் 30 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 21 பேர உட்பட வடக்கில் மேலும் 30 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று 206 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் இவ்வாறு 30 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக,

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் - 21 பேர்,

யாழ். போதனா வைத்தியசாலையில் 3 பேர் (உயிரிழந்த முதியவர் உட்பட),

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒருவர்,

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒருவர்,

முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒருவர்,

முல்லைத்தீவு விமானப்படை முகாமில் ஒருவர்,

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒருவர்,

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒருவர் என தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம)

# தொடருந்து சேவைகள் மறு அறிவித்தல் வரை ரத்து

இன்று முதல் ஆரம்பிக்கப்படவிருந்த தொடருந்து சேவைகளை மீள அறிவிக்கும் வரை ரத்து செய்துள்ளதாகத் தொடருந்து நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன், இன்று முதல் தொடருந்து சேவைகளை ஆரம்பிப்பதற்காக ஊழியர்கள் பணிக்கு அழைக்கப்பட்டதுடன், பின்னர் அதனை ரத்து செய்ததாக அந்தச் சங்கத்தின் செயலாளர் கசுன் சாமர தெரிவித்தார்.

மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாட்டை எதிர்வரும் 31 ஆம் திகதி வரை நீடித்ததையடுத்து, தொடருந்து சேவைகளை ஆரம்பிக்கும் செயற்பாடும் பிற்போடப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)

## மருத்துவக் குறிப்பு


மனக்கட்டுப்பாட்டுடன் நாள்தோறும் கொத்தமல்லி கசாயம் குடித்துவர, குடிக்க வேண்டும் என்ற ஆர்வம் போய்விடும்.

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**வவுனியா பிரதேசத்தில்** நெளுக்குளம் நீர் வழங்கல் சபை, அறுகம்புல்வெளி, பாரதிபுரம், கூமாங்குளம், கூமாங்குளம் கிருஷ்ணா மெடி கிளினிக், கூமாங்குளம் சாய் சிறுவர் இல்லம், நாகரிலுப்பைக்குளம், நெளுக்குளம் கலைமகள் பாடசாலையடி நொச்சிக்குளம், அவுசதப் பிட்டிய, பாண்சின்னகுளம், பொன்னாவரசங்குளம், இரடிஜேந்திரகுளம், சாம்பல் தோட்டம் வீட்டுத் திட்டம், விநாயகபுரம் வீட்டுத் திட்டம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# சத்திய தரிசனம்



## பிரமாண்ட லிங்கம்


❖ அதைப்போலவே நீயும் என்னிடமிருந்து தப்பி ஓட முடியாது. எங்கே நீ புகலடைந்தாலும் நான் உன்னிடமிருந்து நல்ல நடத்தை, நல்ல பழக்கவழக்கங்கள், நல்ல எண்ணங்கள், நல்லாரோடு இணக்கம் ஆகியவை வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்பேன்.

❖ என்னை விட்டு நீங்க உனக்கு என்ன காரணம் இருக்கிறது? இங்கே பெறுகின்ற ஆனந்தம், ஆறுதல், தைரியம், அன்பு, ஆசீர்வாதம் ஆகியவற்றை அசட்டை செய்கிறவர்கள்தாம் அப்படி ஓடிப்போவார்கள்.

❖ தம் கண்களை நம்பாமல் காதுகளை நம்புகிறவர்களே அப்படிச் செய்வார்கள். சிறிது நேரத்தில் என்னுள்ளே உருவான லிங்கோற்பவத்தை நீங்கள் காண்பீர்கள். லிங்கோற்பவத்திற்கான புனிதநேரம் வந்து கொண்டிருக்கிறது. அதைப் பார்த்தால் ஆசீர்வதிக்கப்படுவீர்கள். (தொடரும்)

# பல யுத்த களங்களையும் ஆக்கிரமிப்புக்களையும் கண்ட ஆப்கானிஸ்தான்

25



கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்

ஆப்கானிஸ்தானில் நிலைமையில் மாற்றம் ஏற்பட்டால், அகதிகள் திரும்பித் தாயகம் போய்விட வேண்டும் என்று கூறி அனுமதிக்கிறார்கள். ஏற்கனவே 35 இலட்சம் ஆப்கானிஸ்தானியர்கள், ஈரானில் தான் தஞ்சம் புகுந்திருக்கிறார்கள்.

தஜிகிஸ்தானிலும் பல்லாயிரக் கணக்கான அகதிகள் ஏற்கனவே அடைக்கலம் அடைந்து விட்டனர். உஸ்பெகிஸ்தானிலும் சில ஆயிரம் அகதிகள் மறுவாழ்வு தேடிச் சென்றுள்ளனர். இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, ஐரோப்பிய யூனியன், ஜேர்மனி எனப் பல நாடுகள் ஆப்கானிஸ் தானியர்களுக்கு தஞ்சம் தந்து வருகின்றன.

இப்படி ஆப்கானிஸ் தானை விட்டு ஆயிரமாயிரம் மக்கள் உயிர்ப் பயத்தால் வெளியேறிக் கொண்டிருக்கிற நிலையில், அவர்களது எதிர்காலம் குறித்த கேள்விகளும் எழாமல் இல்லை. ஒரு பக்கம் உயிர்ப்பயம், இன்னொருபக்கம் வாழ்வாதாரமின்மை என ஒவ்வொரு நாளையும் கண்ணீரில் தான் ஆப்கானிஸ்தான் மக்கள் கடத்திச் சென்று கொண்டிருக்கிறார்கள் என்பது நிதர்சனமான உண்மையாகி இருக்கிறது. (நன்றி –https:www. maalaimalar. com)

**2021, செப்டெம்பர் 6 - பஞ்ச்ஷிர் மாகாணம் வீழ்ந்தது**

காபூலைக் கைப்பற்றிய மூன்று வாரங்களுக்குப் பிறகு நாட்டின் கட்டுப்பாட்டை உறுதிப்படுத்தியதால், ஆப்கானிஸ்தானின் கடைசிப் பகுதியான எதிர்ப்புப்படைகளின் கட்டுப்பாட்டில் இருந்த பஞ்ச்ஷிர் மாகாணத்தை தலிபான் முழுமையாக கைப்பற்றி விட்டனர் என்று 2021, செப்டெம்பர், 6 செய்தி வந்தது. "இந்த வெற்றியின் மூலம், நமது நாடு போரின் இக்கட்டான சூழ்நிலையிலிருந்து முழுமையாக வெளியேற்றப்பட்டது" என்று தலைமை செய்தித் தொடர்பாளர் ஜபிஹுல்லா முஜாஹித் திங்களன்று (06-09-2021) கூறினார். சமூக ஊடகங்களில் படங்கள் தலிபான் உறுப்பினர்கள் பஞ்ச்ஷிர் மாகாண ஆளுநர் வளாகத்தின் வாயிலின் முன் நிற்பதைக் காட்டியது.

சமீபத்திய சண்டையில் ஆப்கானிஸ்தானின் பிரபல பத்திரிகையாளர் மற்றும் செய்தித் தொடர்பாளர் ஃபாஹிம் டாஷ்டி மற்றும் ஜெனரல் அப்துல்வுடோத் ஜாரா ஆகியோர் கொல்லப்பட்டதாக அந்தக் குழு ஞாயிற்றுக்கிழமை ஒரு டுவிட்டில் தனித்தனியாக கூறியது. தலிபான் செய்தித் தொடர்பாளர் முஜாஹித், திங்களன்று செய்தியாளர் சந்திப்பில், தலிபான்கள் பேச்சுவார்த்தைக்கு முயன்ற போது எதிர்ப்புப் படைகள் "எதிர்மறை பதில்களை" அளித்ததாகவும், பஞ்ச்ஷிர் கைப்பற்றப் பட்டதில் பொதுமக்கள் உயிரிழப்புகள் எதுவும் இல்லை என்றும் கூறினார்.

1980களில் சோவியத் படைகளுக்கும் 1990களின் பிற்பகுதியில் தலிபான்களுக்கும் எதிர்ப்பு தெரிவிக்கும் இடமாக பஞ்ச்ஷிர் பள்ளத் தாக்கு புகழ்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



தலிபான்கள் பஞ்ச்ஷிரை கைப்பற்றிய பின் ...

**அகமது மசூது எங்கே?**

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சியை எதிர்த்து பஞ்ச்ஷிர் பகுதியிலிருந்து குரல் கொடுத்து வந்த அகமது மசூது எங்கே சென்றார் என்ற கேள்வி எழுந்துள்ளது. தலிபான் எதிர்ப்புக் குழுத் தலைவர் அகமது மசூத் வெளிநாட்டுக்கு தப்பி விட்டதாக தகவல் வெளியானது. ஆனால், மசூத் இன்னமும் ஆப்கானிஸ்தானில் தான் இருக்கிறார் என்று ஈரான் செய்தி நிறுவனம் ஃபார்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

ஆப்கான் மக்களுக்கு ஒடியோ மூலம் ஒரு வேண்டுகோளை முன் வைத்திருந்தார் அகமது மசூத். அதில், ஆப்கான் மக்கள் அனைவரும் சுதந்திரத்துக்காக, தனி நபரின் மாண்புக்காக, நாட்டின் வளத்திற்காக ஒன்றிணைந்து எழுச்சியுடன் போராட வேண்டும் என்று குரல் கொடுத்திருந்தார். இந்நிலையில், தலிபான்களுடன் பேச்சு வார்த்தைக்குத் தயாராக இருப்பதாக மசூத் அறைகூவல் விடுத்துள்ளார். தலிபான்கள் பஞ்ச்ஷிரில் இருந்து வெளியேறினால் சண்டையை நிறுத்துவதாகவும் கூறியுள்ளார். ஆனால், தலிபான்களோ அகமது மசூதையும், ஆப்கனின் முன்னாள் துணை ஜனாதிபதி அம்ருல்லாசலேவையும் தேடி வருகின்றனர். அம்ருல்லாசலேயின் சகோதரரை தலிபான்கள் கொன்று விட்டதாகத் தகவல் வெளியாகியது.

**2021, செப்டெம்பர் 7**

ஆப்கானிஸ்தானின் தலைவர் ஹசன் அகுந்த், துணைத் தலைவர் கனி பரதார் என தலிபான்கள் அறிவிப்பு.

ஆப்கானிஸ்தானை ஆளப் போகும் தலைவர்களின் பட்டியலை தலிபான்கள் அறிவித்திருந்தனர். அதன்படி தலிபான் இயக்கத்தின் தலைவர் முகமதுஹசன் அகுந்த் புதிய இடைக்கால அரசின் தலைவராக (பிரதமராக) இருப்பார் என்றும் அப்துல் கனிபரதர் துணைத் தலைவராக (துணைப் பிரதமராக) இருப்பார் என்றும் தலிபான்கள் அறிவித்தனர்.

அமெரிக்காவால் தேடப்படும் நபரான சிராஜுதீன் ஹக்கானி ஆப்கானிஸ்தானின் உள்துறை



அமைச்சராக தேர்வு செய்யப்பட்டுள்ளார். தலிபான் செய்தித் தொடர்பாளர் ஜபிபுல்லா முஜாகிதீன் பத்திரிகையாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்திருந்தார்.

கடந்த 20 ஆண்டுகளாக, அமெரிக்கப் படைகளுக்கு எதிராக போராடிய முக்கிய தலைவர்கள் இடைக்கால அரசில் இடம்பெற்றுள்ளனர். பிரதமராக நியமிக்கப்பட்டுள்ள முல்லா ஹசன் அகுந்த், தலிபான் நிறுவர்களில் ஒருவரான முல்லா உமரின் நெருங்கிய கூட்டாளியாவார். அத்துடன் சமயத் தலைவர் என்பதைவிட, இராணுவ தளபதியாக அறியப்பட்ட ஹசன் அகுந்த். தற்போது, முக்கிய முடிவுகளை எடுக்கும் தலிபான் குழுவின் தலைவராக உள்ளார்.

இந்நிலையில் ஆப்கானின் பிரதமராவார் என எதிர்பார்க்கப்பட்ட முல்லா அப்துல் கனி பரதார் முதலாவது துணை பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதோடு, அமெரிக்க படைகள் ஆப்கானிஸ்தானைவிட்டு வெளியேறுவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டவர் ஆவார்.

இரண்டாவது, துணைப் பிரதமராக முல்லா அப்துல் சலாமும், முல்லா உமரின் மகனான முல்லா முகம்மது யாகூப் பாதுகாப்புத்துறை அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. நிதியமைச்சராக ஹெதாயத்துல்லா பத்ரி நியமிக்கப்பட்டுள்ளார்.

அமைச்சரவையில் இடம் பெற்றுள்ள 19 பேரும் தலிபான்கள் அமைப்பை சேர்ந்தவர்கள் ஆவர், தலிபான்கள் அல்லாதவர்களையும் அமைச்சரவையில் சேர்க்க வேண்டும் என்ற சர்வதேச சமூகத்தின் கோரிக்கை ஏற்கப்படவில்லை.

இதேவேளை இடைக்கால அரசு எவ்வளவு நாள் ஆட்சியில் இருக்கும்? எப்போது தேர்தல் நடத்தப்படும்? என்ற கேள்விகளுக்கு தலிபான்கள் பதில் அளிக்கவில்லை.

(தொடரும்...)

## 18 பேர்...

தொற்றுக் காரணமாக உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 13,543 ஆக உயர்வடைந்துள்ளது. (ம)

## யாழ்ப்பாணத்தை...

றைச் சேர்ந்த குறித்த முதியவர் கிளிநொச்சி 155ஆம் கட்டையில் உள்ள மகள் வீட்டுக்கு வந்த நிலையிலே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் பழனி மகேந்திரம் (வயது-70) என்பவரே உயிரிழந்துள்ளார்.

மற்றைய மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-316)

## 639 ஆரம்ப...

சாலைகள் சுகாதார வழிகாட்டலின் கீழ் இன்று வியாழக்கிழமை ஆரம்பிக்கப்படுகின்றன.

வடக்கு மாகாண கல்வி, சுகாதாரம் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுகளின் ஒன்றிணைந்த ஒத்துழைப்பின் கீழ் பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்படுகின்றன என்று மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.

மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதில் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்களது அர்ப்பணிப்பான சேவை பாராட்டுக்குரியது" என்றும் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார். (ம-18,33)

## இன்றும் நாளை...

பணிக்கு செல்லாமல் சேவைப் புறக்கணிப்பை முன்னெடுக்க வேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உபதலைவர் தீபன் திலீசன் தெரிவித்தார்.

நேற்று நண்பகல் நடந்த ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரசியல்வாதிகளுடனும் அரசோடு சேர்ந்து இயங்குகின்ற ஒரு சில அமைப்புகளும் சங்கங்களும் 21ஆம் திகதி பாடசாலைக்குச் செல்வதென அறிவித்திருந்தாலும் அதிபர்களும் ஆசிரியர்களும் எங்கள் உரிமைக்காக சேவையைப் புறக்கணித்து போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம்.

அந்த வகையிலே இன்றும் நாளையும் அதிபர்கள் ஆசிரியர்கள் விடுமுறையை அறிவிக்காமல் எந்தவித முன்னறிவிப்பும் இன்றி எந்தவித அச்சமுமின்றி இப்போராட்டத்தில் பங்கேற்க வேண்டும் என்றார். (ம)

## மாணவர்கள்...

லும் தடுக்க முடியாது என்று கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இன்று ஆரம்பிக்கப்படும் பாடசாலை புதிய தவணைக் காலம் குறித்து கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன அறிக்கை வெளியிட்டுள்ளார். அதிலேயே இந்தக் கருத்தை அவர் குறிப்பிட்டுள்ளார்.

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பாடசாலை மாணவர்களின் எதிர்காலம் பெற்றோரின் மகிழ்ச்சியில் மட்டுமல்ல, ஒட்டுமொத்த தேசத்தின் மகிழ்ச்சியாகும்.

இலட்சக்கணக்கான மாணவர்கள் அந்த மகிழ்ச்சியை எடுத்துக்கொண்டு இன்று மீண்டும் பாடசாலை மைதானத்தில் விளையாடுவார்கள்.

இதுவரை காணாத தங்கள் மாணவர்களின் மகிழ்ச்சியான முகங்களைப் பார்க்க ஆசிரியர்கள் இன்று பாடசாலைக்கு வருவார்கள்.

கல்விதான் நாட்டின் எதிர்காலம் மற்றும் வலிமை. எனவே, ஆசிரியர்களின் சம்பளத்தை அதிகரிக்க ஜனாதிபதி, பிரதமர் மற்றும் நிதிஅமைச்சர் ஆகியோர் நம்பகமான தீர்வைக் கொண்டு வந்துள்ளனர் என்பதை நினைவுகூருகின்றேன்.

நாடுமுழுவதும் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பாடசாலைக்கு வருவதை யாராலும் தடுக்க முடியாது என்றுள்ளது. (ம)

## பயணக் கட்டுப்...

துள்ளார்.

இதனையடுத்து 31ஆம் திகதி வரையில் மாகாணங்களுக்கு இடையிலான தடை நீடிக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி குறிப்பிட்டுள்ளார்.

எனினும் அத்தியாவசிய சேவையாளர்களுக்கு எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தாது என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## புலிகளின் காலத்...

ஆனால் அது எவ்வாறு கட்டுப்படுத்தப்பட்டிருந்தது என்பது எமக்கு தெரியவில்லை.

மேற்கண்டவாறு கடற்படை பேச்சாளர் கப்டன் இந்திக்க டி சில்வா கூறியுள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பாக மேலும் கூறுகையில்,

தமிழீழ விடுதலைப் புலிகள் காலத்தில் வடக்கு, கிழக்கில் போதைப்பொருள் கடத்தல்கள் இடம்பெற்றிருக்கவில்லை. அது எவ்வாறு கட்டுப்படுத்தப்பட்டிருந்தது என்பது எமக்குத் தெரியவில்லை.

ஒருவேளை போர் நடைபெற்றுக் கொண்டிருந்ததால் வெளிநாட்டு படகுகள் இலங்கை கடல் எல்லைக்குள் நுழைய முடியாது. அதுவும் காரணமாக இருக்கலாம் என்றார். (ம)

## யாழில் மேலும்...

கொரோனா விடுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு மேலுமொரு கொரோனா மரணம் பதிவாகியுள்ளது.

பருத்தித்துறை வீதி கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த 65 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

யாழில் உயிரிழந்த 70 வயது முதியவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் குறித்த தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-30)


சீட்டிழுப்பு வாரம் 094
சீட்டிழுப்பு திகதி 20.10.2021 புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள் 11 26 48
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 100,000.00/=

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 20/10/2021
சீட்டிழுப்பு இலக்கம் 1150
வெற்றி இலக்கங்கள்
மேஷம் 9 2 3 5 5 8

அத கோடிபதி
திகதி: புதன்கிழமை
சீட்டிழுப்பு இல: 1364
சீட்டிழுப்பு திகதி: 20.10.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 55,578,260
வெற்றி இலக்கங்கள் 02 12 38 54 Q

சனிதா
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2021.10.19
சீட்டிழுப்பு இல: 3698
வண்ணம்: இளநீலம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,813,380/-
வெற்றி இலக்கங்கள் 14 18 47 68 Y

மெகா பவர்
திகதி 20/10/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0909
வெற்றி இலக்கங்கள் C 22 03 26 46 74

சனிதா
திகதி: புதன்கிழமை
சீட்டிழுப்பு இல: 3699
சீட்டிழுப்பு திகதி: 20.10.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 36,156,141.60
வெற்றி இலக்கங்கள் 20 53 59 63 S

அத கோடிபதி
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல: 1363
வண்ணம்: இளநீலம்
சீட்டிழுப்பு திகதி : 2021.10.19
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,375,480/-
வெற்றி இலக்கங்கள் 31 39 61 71 S

மஹஜன சம்பத
திகதி 2021/10/20
சீட்டிழுப்பு இலக்கம் 4561
E 6 5 5 0 6 6

சுப்பர் ஜக்பொட் 2,091,496.40/=
திகதி : 20.10.2021
வெற்றி வாரம் : 3250
வெற்றி இலக்கங்கள் 13 18 27 41 கன்னி

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1537 நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2021/10/19 தினம் செவ்வாய்
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் Q 04 40 55 73
Total Value of Prizes 3,469,380/-

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 20.10.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2856
வெற்றி இலக்கங்கள் J 07 19 45 60

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1538
சீட்டிழுப்பு திகதி 20.10.2021 தினம் புதன்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் E 33 54 60 62
அடுத்த சுப்பர் ஜக்பொட 66,584,000/=

திகதி 2021/10/19
வெற்றி வாரம் 3249
வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 05 19 22 61 மேஷம்
Total Value of Prizes ரூ. 9,683,543/-

தன நிதானய
திகதி - 2021.10.20
சீட்டிழுப்பு இலக்கம் - 591
P 27 28 38 73

ஜயோதா
சீட்டிழுப்பு வாரம் 1778
சீட்டிழுப்பு திகதி 20.10.2021
வெற்றி இலக்கங்கள் 01 26 51 55 T
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 27,149,776
தொ. பே. : 0112 333 546/47
Web: www.dlb.lk

Z 04 23 39 51
754
19. 10 2021
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 84,808,895/-

# ஐ.தே.கட்சியே எதிர்காலத்தை கட்டியெழுப்பும்

## ரணில் உறுதி

எதிர்காலத்தை கட்டியெழுப்பக் கூடிய ஒரே கட்சி ஐக்கிய தேசியக் கட்சியேயாகும் என அதன் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

கட்சி உறுப்புரிமையை பெற்றுக் கொள்வதற்காக புதிய அலைபேசி செயலியொன்றை அறிமுகம் செய்யும் நிகழ்வில் நேற்று உரையாற்றியபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

டிஜிட்டல் கட்சி உறுப்புரிமையை அறிமுகம் செய்யும் முதல் கட்சியாக நாம் செயற்படுகின்றோம். நாளையை கட்டியெழுப்பும் கட்சியே எமது கட்சி. எனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தில் 2003ஆம் ஆண்டில் நாட்டில் அரிசியில் தன்னிறைவை ஏற்படுத்தினேன் என்றார் (ம)

## இலங்கையில்...

சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸை மரியாதை நிமிர்த்தமாக சந்தித்தபோது தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள வெளிவிவகார அமைச்சில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன்போது, இரு நாடுகளுக்கும் இடையேயான பலதரப்பட்ட ஒத்துழைப்பு மற்றும் நட்புறவை இரு தரப்பினரும் வரவேற்றதுடன், இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினர் என்று வெளிவிவகார அமைச்சின் ஊடகப்பிரிவு நேற்று தெரிவித்துள்ளது. (ம)

## தங்க நகை...

பொலிஸ் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுன்னாகம், வட்டுக்கோட்டை, அச்சுவேலி உள்ளிட்ட ஐந்து இடங்களில் வீதியில் பயணித்தவர்களிடம் தங்க நகைகளை அறுத்து அபகரித்துச் சென்ற தெல்லிப்பழை மற்றும் ஏழாலையைச் சேர்ந்த 20 முதல் 25 வயதான நான்கு பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து நகைகளைக் கொள்வனவு செய்த சுன்னாகத்தில் அமைந்துள்ள நகைக் கடை உரிமையாளர் ஒருவர் 6 தங்கப் பவுண் எடையுடைய 5 சங்கிலிகளுடன் கைது செய்யப்பட்டுள்ளார். வழிப்பறிக்குப் பயன்படுத்திய இரண்டு மோட்டார் சைக்கிள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-18,33)

## வடக்கு, கிழக்...

நேற்று புதன்கிழமை வெளியிட்ட ஊடக அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடகிழக்கு மாகாணங்களில் இருந்து இராணுவத்தை வெளியேற்றினால்தான் தமிழர் தாயகம் உய்யும். தற்போது அடிமை நாடாக மத்திய அரசாங்கம் வடக்கு கிழக்கை போரின்பின் நிர்வகித்து வருகின்றது. உள்நாட்டுப் பிராந்திய பாதுகாப்பு கூட்டு சமஷ்டியில் பிராந்திய ங்களுக்கே வழங்கப்படும். நாம் எம்மைப் பாதுகாத்துக்கொள்ளும் காலம் வரும். பொலிஸ் உரித்துக்கள், காணி உரித்துக்கள், பிராந்திய உள்நாட்டுப் பாதுகாப்பு அனைத்தும் பிராந்திய அலகுகளுக்கே வழங்கப்படும்.

இன்று படையினர் வடகிழக்கு மாகாணங்களில் போரின் பின்னர் தொடர்ந்து இருப்பதால் பல பாதிப்புகளுக்கு நாம் முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

1. எமது வாழ்வாதாரம் தடைப்படுகின்றது. எமது நிலங்களை இராணுவம் பயன்படுத்தி இலாபம் பெறுகின்றார்கள்.

2. எமது சுதந்திரம் தடைப்படுகின்றது. மக்கள் இராணுவம் முகாம் இட்டிருக்கும் இடங்களினூடாகப் பயணிக்க அஞ்சுகின்றார்கள். சுற்று வட்டார பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் அச்சத்தில் வாழ்கின்றார்கள்.

3. தமிழர் தாயக நிலங்கள் பறிபோவதற்கு படையினரே உறுதுணையாக நிற்கின்றார்கள். பல்லாயிரம் ஏக்கர் நிலங்களைச் சுவீகரித்துள்ளார்கள்.

4. திணைக்களங்களுடன் படையினர் சேர்ந்து பிறழ்வான வரலாற்றுக் காரணங்களை முன்வைத்து நிலங்களைக் கையேற்கின்றார்கள்.

5. புத்த பிக்குகளுடன் படையினர் சேர்ந்து நிலங்களை ஆக்கிரமிக்கின்றனர்.

6. பௌத்த வணக்கஸ்தலங்களை பௌத்தர்கள் அல்லாத இடங்களில் நிர்மாணிக்க படையினர் உதவி புரிந்து வருகின்றனர்.

7. படையினர் வடமாகாண மக்களின் நடமாட்டங்கள், எவர் எவருடன் அவர்கள் உள்ளூரில் தொடர்பு வைத்துள்ளார்கள் மற்றும் அவர்களுக்கு யார் யாருடன் வெளிநாட்டிலும் தொடர்பு இருக்கின்றது என்பவை சம்பந்தமான முழு விபரங்களையும் சேகரிக்கின்றார்கள். இவை உத்தியோகபூர்வ காரணங்களுக்கே என்று நாம் நினைக்கக்கூடும். ஆனால் பணம் பறித்தல், கடத்தல் போன்ற பல காரியங்களுக்கும் இவ்வாறான தரவுகள் பாவிக்கப்படுகின்றன.

8. இங்குள்ளவர்கள் வெளிநாட்டுத் தமிழர்களுடன் தொடர்புகொள்ளும்போது அவர்கள் புலிகள் இயக்கத்துடன் முன்னர் தொடர்புடையவர்கள் என்று கண்டால் உடனே இங்குள்ளவர்களை பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்ய படையினர் உதவுகின்றார்கள்.

9. உள்ளூர் மக்கள் பலரின் வறுமையைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு சில நன்மைகளைச் செய்து அவர்களைத் தமது கையாட்களாக தமிழ் மக்களுக்கு எதிராக மாற்றுகின்றார்கள்.

10. இன்று மத்திய அரசாங்கக் கட்சிகளின் மக்கள் பிரதிநிதிகளாக வட கிழக்கு மாகாணங்களில் வலம் வருபவர்கள் படையினர் இங்கு வேரூன்றி நிற்கின்றார்கள் என்ற ஒரே ஒரு பலத்தின் நிமித்தமாகவே அவ்வாறு வலம் வருகின்றார்கள். அரச பலம் என்பது இவர்களுக்கு இங்கு முகாம் இட்டிருக்கும் படையினர் மூலமே கிடைக்கின்றது. படையினர் வடகிழக்கில் இருந்து வெளியேறி விட்டால் அரச கட்சிகளின் பிரதிநிதிகளின் இருப்பு கேள்விக்கிடமாகிவிடும்.

அது மட்டுமல்ல, தெற்கிலிருந்து இழுவைப்படகுகள் இங்கு வந்து எமது கடல் வளங்களைச் சூறையாடுவது நின்றுவிடும். திணைக்களங்கள் எமது மக்களின் தாயக நிலங்களைக் கையேற்பது நின்றுவிடும். புத்த பிக்குகள் பௌத்த வணக்கஸ்தலங்களை எதேச்சாதிகாரமாக வடகிழக்கில் நிறுவுவது நின்று விடும். வடகிழக்கில் சிங்களக் குடியேற்றங்கள் நின்றுவிடும். இதுவரையில் கைப்பற்றப்பட்ட நிலங்கள் திரும்பப்பெற கூட்டு சமஷ்டி முறை வழி வகுக்கும்.

படையினர் தொடர்ந்து வடகிழக்கு மாகாணங்களில் இருப்பதால் இன்னும் எத்தனையோ விபரீதங்கள் நடைபெறுகின்றன. இவை யாவற்றையும் முறியடிக்க வேண்டுமானால் கூட்டு சமஷ்டி எமக்கு அவசியம். ஒற்றையாட்சியின் கீழ் "இராணுவமே வெளியேறு" என்றால் அடுத்த நிமிடமே எம்மைப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைத்து விடுவார்கள் என்றுள்ளது. (ம)

## மரண அறிவித்தல்



மலர்வு 29 – 10 – 1942

உதிர்வு 20 – 10 – 2021

## சின்னத்தம்பி வேலுப்பிள்ளை

தாவளை இயற்றாலையை பிறப்பிடமாகவும் வரணி இயற்றாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி வேலுப்பிள்ளை நேற்று (20.10.2021) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சின்னத்தம்பி - பாறிப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும் வள்ளிப்பிள்ளையின் அன்புக் கணவரும் பரமேஸ்வரி, பரா்சக்தி, பரணீதரன் (ஆசிரியர் - யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), பகீரதன், கலையரசி (ஆசிரியை - யா/இயற்றாலை அ.மி.த.க பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னரின் இறுதிக் கிரியைகள் இன்று (21.10.2021) வியாழக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளிற்காக பூதவுடல் ஊத்தல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (C-2846)

இயற்றாலை,
வரணி.

தகவல்:- வே.பரணீதரன் (ஆசிரியர் J/C.H.C)
வே.பகீரதன் (இந்திரன் -மெக்கானிக்)


**விற்பனை உதவியாளர் வேலை வெற்றிடம்**

Petform (Pvt) Ltd இன் உரும்பிராய் கிளையில் பணி புரிவதற்கு உயர்தரம் வணிகக்கல்வி படித்த மோட்டார் வாகன அனுமதிப்பத்திரமுள்ள 20 - 25 வயதுள்ள ஆண் விற்பனை உதவியாளர் தேவை. (8317)

தொடர்புகளுக்கு:- 076 072 1245, 021 314 9700

**DMI - Jaffna**
A/L விவசாய விஞ்ஞானம்
21 Batch - விவசாயப் பொருளியல்
22 Batch - பீடை முகாமைத்துவம்
23 Batch
வகுப்புகள் நடைபெறுகின்றன
Zoom ஊடாக நடைபெறும் (8312)
077 848 0604

**காணி விற்பனைக்கு உண்டு**
இருபாலை சந்திக்கு அண்மையில் (பருத்தித்துறை வீதியில் ) 4 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (8327)
075 203 4547

**அமெரிக்கா செல்ல**
பாஸ்போர்ட் எடுத்து விட்டீர்களா?
விளையாட்டு அல்ல இது உண்மை
அமெரிக்க அதிஸ்ட விசா
இதுவரை எமக்கூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்கா சென்றுள்ளார்கள் (C-2833)
இலவச வாய்ப்பை தவறவிடுவானேன்?
எல்லோருக்கும் வெளிநாடு செல்ல வசதி இருக்காது ஆனால் 18-வயதிற்கு மேற்பட்ட யாரும் இந்த இலவச வாய்ப்பை பயன்படுத்தலாம்.
குடும்பத்தினர்களுக்கு இரண்டு வாய்ப்புக்கள்
பாஸ்போட் இல்லாமல் விண்ணப்பிக்க முடியாது
பதிவுகள் ஆரம்பம்-07-10-2021
உடனடியாக கொழும்பு சென்று One Day Pass Port எடுங்கள்
V2 Travels 0768226244
0768226237 / 0768226240

**விரைவு பொதிகள் சேவை**
V2 TRAVELS
UK-975 /=Kg
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● புத்தூர் ● கோப்பாய்
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● கிளிநொச்சி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை ● சாவகச்சேரி
(C-2831)
0768226240 DHL

**VISA விண்ணப்பங்கள்**
அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
✓ONLINE APPLICATIONS
✓VISA APPOINTMENTS
✓PASSPORT APPLICATION
✓POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-2836)
• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா
Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A.சப்பல் லேன். யாழ்ப்பாணம். V2 TRAVELS
0777-068-777


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.10.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.